SRI LANKA MUSLIM CONGRESS COLOMBO


# திசை
THISAI


உள்ளே....


- ஒப்பந்தங்களின் உள்நோக்கம் என்ன?
- இலங்கை—இரத்தம் பீறிடும் ராஜகுமாரி!
- இந்திய—சோவியத் உறவில் வளரும் அதிருப்தி
- முஸ்லிம் மாணவர் அமைப்பின் நேசக்கரம்
- இந்து மதமும் தீண்டாமையும்
- இராணுவத் துறையில் ரேடார்
- தேசியஇனப் பிரச்சினையும் ஈழச் சிறுகதைகளும்
- கோளறு பதிகம் — முதற் பரிசுக் கதை


திசை 1 | 1-9-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 34

# 'பந்த்' அனுஷ்டிப்பின் எதிரொலி

# ஜனநாயக உரிமைகள் தகர்கிறது

**இந்திய எதிர்க்கட்சியினர் புதனன்று "பந்த்" அனுஷ்டித்தனர். ஆனால் டெல்லியில் வழமைக்கும் அதிகமாக அரச ஊழியர்கள் வேலைக்குச் சென்றிருந்தனர். இது பந்த்துக்கு ஏற்பட்ட தோல்வியா? அல்லது "பந்த்" அனுஷ்டிக்க அனுமதிக்கும் ஜனநாயக உரிமைக்கு ஏற்பட்ட தோல்வியா? என்பதே இன்றைய அரசியல் அவதானிகளின் கேள்வியாகும்.**

"போபஸ்" உட்பட்ட ரஜீவ் அரசாங்கத்தின் ஊழல் நடவடிக்கைகளையும், ஒழுங்கீனங்களையும் எதிர்க்கும் முகமாக மூன்று மாதங்களுக்கு முன்பே ஒகஸ்ட் 30ஆம் திகதி "பந்த்" அனுஷ்டிக்குமாறு எதிர்க்கட்சிகள் அழைப்புவிடுத்திருந்தன.

ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காகவும், ஏதாவது ஒரு விடயம் பற்றி வெகுஜன அபிப்பிராயங்களை உருவாக்குவதற்கும் கறுப்புக் கொடி காட்டல், கதவடைப்புச் செய்தல், பந்த் அனுஷ்டித்தல் போன்றன அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளாகும்.

ஆனால் உலகிலேயே பெரிய ஜனநாயக நாடாகிய இந்தியாவில் நிகழ்ந்தது என்ன? "பந்த்" அனுஷ்டிப்புக்கு எதிராக ஆளும் கட்சி, அரசின் சகல வெகுஜனத் தொடர்புச் சாதனங்களையும் பல மாதங்களுக்கு முன்பே முடுக்கிவிட்டது. அத்துடன் வேலைக்குச் செல்லாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தது. இவ்வாறு வேலைக்கு வராதவர்களுக்கு பதவி உயர்வு நிறுத்தப்படும் என்றும் இவர்களது பெயர்கள் சிவப்பு மையால் புள்ளியிடப்படும் என்றும் அறிவித்தது. இத்தகைய பல்வேறு அச்சுறுத்தல்கள் எல்லா மட்டங்களுக்கும் விடப்பட்டன.

எனவே டெல்லியில் ஊழியர்கள் வழமைக்கும் அதிகமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய 'பந்த்து'-ம் இலங்கை ஹர்த்தாலும்

இந்தியாவில் எதிர்க்கட்சிகள் ஜனநாயக ரீதியில் அரசுக்கெதிராக நடத்திய 'பந்த்' என்னும் நாடுதழுவிய ஹர்த்தாலை முறியடிப்பதற்காக இந்திய அரசு, ஜனநாயக வழிகளை மீறிய முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

இதே காலத்தில் இலங்கையில் ஜே. வி. பி யால் நடத்தப்படும் ஹர்த்தாலும் அதை முறியடிக்க இலங்கை அரசு மேற்கொள்ளும் முறைகளும் எந்தவித ஜனநாயக பாரம்பரியங்களுக்கும் உட்படாத 'உயிர் அச்சுறுத்தல்' சர்வாதிகாரப் போக்கிலேயே இடம் பெறுகிறது.

ஜனநாயகத்தைப் பேணுவதாகப் பறைசாற்றும் கீழைத்தேய நாடுகள் தற்போது வர வர அதற்கு முற்றிலும் மாறான சர்வாதிகாரப் போக்கால் விழுங்கப்படும் ஆபத்தையே காட்டுகின்றன.

## கொழும்பில் இந்தியப்படை

"இலங்கையில் உள்ள இந்தியர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட இன்றைய நிலையில், அதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?" என்று இந்தியத் தூதுவரால் மெஹ்ரோத்ராவிடம் சண்டே ரைம்ஸ் நிருபர் கேட்டதற்கு, "அது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு. இந்திய மக்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் முழு முயற்சி எடுப்பதாக உறுதியளித்துள்ளார்கள்" என்றார் அவர்.

"அப்படியானால் விமான மூலம் கணிசமான இந்தியத் துருப்புகளை ஜூலை இறுதிவாரத்தில் ஏன்கொழும்புக்குத் தருவித்தீர்கள்?" என்று கேட்டார் நிருபர்.

"இது இலங்கை அரசாங்கத்தில் எங்களுக்குள்ள அவநம்பிக்கையால் ஏற்பட்டதல்ல. எங்கள் தனிப்பட்ட பாதுகாப்புக்கு இது தேவை. ஆகவே இலங்கை அரசின் அனுசரணையுடன் 100 இந்தியத் துருப்புகளைத் தருவித்தோம்" என்றார் தூதுவர்.

"அவர்கள் இன்னும் கொழும்பில் இருக்கிறார்களா?" — நிருபர். "ஆம்" — மெஹ்ரோத்ரா.

## ஜே. வி. பி. — அரசு அதிகார இழுபறி

ஜே வி.பி. யினருக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறும் அதிகார இழுபறி இன்று உச்ச நிலையைத் தொட்டுள்ளது. காலை நேரத்தில் வீதியோரச் சுவர்களில் ஜே.வி.பி யினரின் அரச விரோத சுவரொட்டிகள் காணப்படும். பின்னர் அவை இராணுவத்தால் இருந்த இடம் தெரியாமல் அகற்றப்படும். கடற்கரையில், தெருக்களில், பிரேதங்கள் கிடப்பது வழக்கமாகிவிட்டது. ஆற்றில் மிதந்துவரும் பிரேதங்களும் சகஜமாகி விட்டன.

சிங்களக் கிராமங்களில் இளைஞர்கள் வீடுகளில் உறங்குவதில்லை. காடுகளிலேயே நித்திரை செய்கிறார்களாம். அரசுக்குச்சார்பாக இயங்கிவரும் ஒலிபரப்பு, தொலைக்காட்சி, லேக்ஹவுஸ் போன்ற ஸ்தாபனங்களில் வேலை செய்வோரை உடனடியாக விலகுமாறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் மக்கள் அவலம்

அண்மைக்காலமாக கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் பல வகையான பொருளாதாரக் கஷ்டங்களுக்குள்ளாகி வருவதாகத் தெரிய வருகிறது. அகதிமுகாம்களிலிருந்து தற்போது தமது சொந்த இடங்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள், அங்கு நிலவும் மீன்பிடித் தடையாலும், விவசாயத்தடையாலும் பெரிதும் இன்னல்படுகின்றனர். அண்மையில் இத்தடைகளையும் மீறி இவர்கள் செய்த பயிர்கள் எரிக்கப்பட்டுள்ளன. திருகோணமலையிலுள்ள சுங்கான்குழி, அத்தியடி, மணற்கால், சின்னத்தீவு, இலுமைய வெளி, கல்லடைப்பு, வல்வெட்டுவான் போன்ற பகுதிகளில் இவ்வனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. இச்செயல்கள் மேலும் தொடருமானால் இவர்கள் மீண்டும் அகதிகள் முகாம்களையே தஞ்சம் கொள்ளும் நிலை ஏற்படும்.

## அரைகுறை சமஷ்டி

இந்தியாவில் எதிர்க்கட்சியினர் ஆட்சி புரியும் மாநிலங்களில் "பந்த்" நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக மத்திய றிசேவ் பொலிஸார் அனுப்பப்பட்டனர். இப்பொலிஸார் அம்மாநிலங்களின் ஆளும்கட்சித் தொண்டர்களை பல்லாயிரக் கணக்கில் கைது செய்தனர்.

இந்திய அரசியல் அமைப்பின்படி மாநில அரசுகள் எவ்வளவு தூரம் பலவீனமானவை என்பதை, இந்நடவடிக்கை தெளிவாக்குகின்றது. இதனால் தான் இந்தியாவின் சமஷ்டி அமைப்பை 'அரைகுறைச் சமஷ்டி' (Quasi-Federalism) என அரசியல் அறிஞர்கள் அழைக்கின்றனர் போலும்.

## ஜே. வி. பியால் ஆட்சிக்கு வரமுடியுமா?

ஜே.வி.பி. யின் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்குப் பின்னால் எந்தொரு வெளிநாட்டுச் சக்தியினது கரமும் பதிந்திருக்கவில்லை எனத் தெரிகிறது. ஜே.வி.பி. யிடம் இந்திய எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்பு எனும் கொள்கை இருக்கின்றதே தவிர வேறு அரசுகளுடன் சேர்ந்து செயற்பட்டு வரும் நிலை தற்போதில்லை. ஜே.வி.பி யிடம் ஆக்கபூர்வமான வெளியுறவுக் கொள்கை இன்றில்லை.

ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் அது சீனாவுடன்தான் நல்லுறவை வளர்த்துக் கொள்ளும். தற்போது சீனா ஜே.வி.பி. க்கு உதவத் தயாராக இல்லாதுவிட்டாலும், ஜே.வி.பி. ஆட்சிக்குவரும் பட்சத்தில் அதனை ஆதரிக்க சீனா தயாராக இருக்கும். ஜே வி.பி. ஆட்சிக்கு வந்தால் அமெரிக்காவுடனான அதனது உறவுவளர்வதற்கான வாய்ப்பு, மிகவும் குறைவானது. எனவே ஜே. வி. பி ஆட்சிக்கு வருவதை அமெரிக்கா விரும்பாது. இப்போதிருக்கும் இலங்கை அரசு கவிழ்ந்தால் அந்த இடத்தில் இராணுவ அரசை உருவாக்கவே அமெரிக்கா முயலும்.

ஜே.வி.பி.ஆட்சிக்கு வந்தால் அதற்கு ஆதரவளிக்க முடியாத சூழலில்தான் சோவியத் உள்ளது. எனவே இப்போதிருக்கும் அரசு .தொடர்ந்து பதவியில் இருப்பதையே சோவியத் விரும்புகிறது. மொத்தத்தில் ஜே.வி.பி. ஆட்சிக்கு வருவதைத் தடுக்கக் கூடிய அளவிற்தான் சர்வதேசச் சூழல் உள்ளது. ஆகவே ஜே.வி.பி.யால் ஒருவேளை ஆட்சியைக் கவிழ்க்க முடிந்தாலும், அவர்களால் ஆட்சிக்கு வரமுடியாது என்பதே பெருமளவு உண்மை.

# திசை
THISAI

ஆசிரியர்'
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 225/-
அரைவருடம்-ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி :

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


# ஈழத்துநூல்களின் அதிக விற்பனைக்கு...

தங்கள் பத்திரிகையில் ஈழத்து வெளியீடு பற்றியும் சனசமூகநிலையங்கள் அவற்றை ஊக்குவிப்பது பற்றியும் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவிப்புப் பற்றியும் வெளிவந்த செய்திகள் தொடர்பாக சில கருத்துக்களைத் தர விரும்புகிறேன். எமது அங்கத்தவர் ஈழத்துப் பிரசுரங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற கருத்தை உடையவர்கள். இருந்தபோதும் ஈழத்துப் பிரசுரங்களில் உள்ள முக்கியமான குறைபாடுகளை இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஈழத்துப் பிரசுரிப்பாளர்கள் விற்பனை முறைகளை முழுமையாகக் கையாள்வது இல்லை. புத்தகங்கள் பற்றி பத்திரிகையில் வெளியீட்டு விழாச் செய்திகளைப் பார்க்கமுடியுமே தவிர, புத்தகங்களை எல்லா இடங்களிலும் பெறமுடியாது. புத்தகங்கள் பற்றிய விளம்பரங்களைப் பிரசுரிக்காமையால் அவற்றின் விலை, கிடைக்கும் இடம் என்பன பற்றி அறிய முடிவதில்லை. யாழ்ப்பாணத்தில் கூட வெளிவந்தவுடன் பெறமுடியாது. ஈழத்து வெளியீட்டாளர்கள் பெரும்பாலும் தமது ஆக்கங்களையே வெளியிபவர்களாக இருப்பதனால் வெளியீட்டு விழாக்களிலும், தமது நண்பர்கள் மூலமும் விற்க முனைகிறார்கள்.

புத்தகங்களுக்கு ஆதரவு குறைவு என்பதைவிட புத்தகம் பற்றிய தகவல் சரியாகக் கிடைப்பதில்லை. இந்தியப் புத்தக விற்பனைக்குப் பல காரணம் இருந்தாலும் முக்கியமாக அவை எம்மைத் தேடி கிராம மக்களுக்கு வரக்கூடிய முறையில் முகவர்களை அமைத்துள்ளார்கள். ஈழத்து வெளியீட்டாளர்களும் தினசரிப் பத்திரிகையின் உதவியுடன் தமது புத்தகங்களை விற்க முன்வந்தால் நிலையங்களின் ஆதரவு கூடுதலாகும்.

எம்மத்தியில் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் இல்லை எனலாம். புத்தக வெளியீட்டைத் தொழிலாகக் கொண்ட நிறுவனங்கள் தோன்ற வேண்டும். கல்விப் பிரசுரங்களைப் பொறுத்த மட்டில் சில அமைப்புக்கள் செயல்படுகின்றன. அவை கலை, இலக்கியத்தில் ஈடுபடுவதில்லை. இன்றைய நிலையில் பத்திரிகை வெளியிடும் நிறுவனங்கள் மாதம் ஒரு புத்தகத்தை வெளிக் கொண்டு வரலாம்.

இத்துறையில், தனித்துவத்துடன் இயங்கும் தங்கள் நிறுவனம் ஈடுபட வேண்டும். புதிதாக வெளிவரும் புத்தகத்தின் விலை, கிடைக்கும் இடம் என்பன பற்றிய தகவல்களை 'திசை' வழங்கி மற்றைய பத்திரிகைகளுக்கு முன் மாதிரி படுகச் செயல்பட வேண்டுகிறேன்.

தலைவர்
கலைவாணி சனசமூக நிலையம்
மத்தொனி, கரவெட்டி.

## ஒரு வேடிக்கை !

தாங்கள் நடத்திய சிறு கதைப்போட்டியில் எனக்கு இரண்டாம் பரிசு கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி. போட்டியை நடத்திய உங்களுக்கும் நன்றி.


இஸ்லாமிய பகைப்புலத்தில் எழுதப்பட்ட அக் கதைக்குப் பரிசு கிடைத்ததையிட்டு, நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

ஆனால் ஒரு வேடிக்கை, பரிசு கிடைத்தமை உட்பட பரிசளிப்புவிழா நடைபெற்றமை வரை ஒன்றையும் நான் அறியேன். காரணம்,

1. உங்கள் பத்திரிகை ஒரு மாதத்துக்குமேலாகக் கொழும்பில் விநியோகிக்கப்படாமை.

2. உங்கள் தபால்கள் ஒன்றும் எனக்குக் கிடைக்காமை.

இவ்வஞ்சலை நான் மன்னாரிலிருந்து வரைகின்றேன். நேற்றுத்தான் நான் ஊர் வந்து சேர்ந்தேன். அதன் பின்னர் தான் இந்த விபரங்கள் அனைத்தையும் அறிந்தேன். மிக்க கவலையுற்றேன். எனக்குப் பரிசளிப்பின் விபரம் தெரிந்திருந்



தால் நிச்சயமாக பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டிருப்பேன். இது எனது கொள்கையிலும் ஒன்று. இத்தகைய வைபவங்களில் கலந்து கொள்வதன்மூலம் எழுத்தாளர் சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டு, அதன்மூலம் பல இலக்கியப் பரிமாற்றங்களையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்வது எனது வழக்கமாகும். அந்தச் சந்தர்ப்பத்தை இழந்ததையிட்டு மிக வருந்துகிறேன்.

கலைவாதி கலீல்
மன்னார்.

## புதுமுகப் போராட்டத்தில் . . . .

'திசை'யில் என் திசையிலும் தென்றல் தவழ்ந்ததை இத்திசை தங்கள் கடிதம் காட்டியது. இதுவரை கால என் இலக்கிய உலகின் புதுமுகப் போராட்டத்திற்காய் நடத்திய சகல போராட்டங்களும் வீணோ என்று என்னுள்ளேயே எழுந்த அச்சத்தை, தங்கள் நடுவர்கள் முடிவு துடைத்தெறிந்து, சாதாரண சித்தியிலேனும் கடைத்தேறும் தகைமை எனக்குண்டென என்னைத் தீர்மானிக்க வைத்தமைக்கு நன்றி. பரிசு பெற்ற ஏனையோர்க்கும் என் மகிழ்வின் வாழ்த்துக்கள்.

ஆயினும், நிகழ்கால நடப்புக்களின் கோரத் தாண்டவங்கள் சிலவற்றை முகம்நோக்கி, மனம் நோக நிலைசோரும் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், தங்கள் பரிசளிப்பு நிகழ்வின் களங்கண்டு, உளம் பூரிக்க முடியாத் துர்ப்பாக்கியத்தைத், தாங்கள் நிலையுணர்ந்து பொருட்படுத்த மாட்டீர்கள் என அறிவேன்.

மற்றும் இலக்கிய ஆர்வலர்களையும் எனக்கு அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்பையும் 'தற்கொலை' செய்து கொள்ளல் மகிழ்வைத் தரக்கூடியதல்லவே!

இரிஷி ப்ரபஞ்ஷன்
திருகோணமலை.

## தொடர்ந்தும் முற்போக்காக. . .

நீங்கள் பரிசளிப்பு வைபவம் பற்றி எழுதிய கடிதம் மந்த கதியிலேயே கண்டியில் எனக்குக் கிடைத்தது. அதன் காரணமாக பரிசளிப்பு வைபவத்தில் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை என்பதை மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தரமான, முற்போக்கான பத்திரிகையாக வரும் 'திசை' தொடர்ந்தும் தரத்தையும் முற்போக்கான கருத்துக்களையும் கொண்டு வெளிவரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

ந. பார்த்திபன்
ரஜவெல, கண்டி.

## தவிர்க்க இயலாத . . .

தங்கள் 'திசை' சிறுகதைப் போட்டியில், P. சிவனேசனாகிய யான் எழுதிய 'முகத்திரை' சிறுகதை ஆறுதல் பரிசிற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்த செய்தியினை திசை மூலம் அறிந்து மகிழ்ச்சியுற்றேன். பின்னர் அது பற்றி தாங்கள் எனது நிரந்தர முகவரிக்கு அனுப்பிய கடிதமும் அங்கிருந்து கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி.

தவிர்க்க முடியாத , காரணத்தால் தாங்கள் அறிவித்துள்ள திகதியில் பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன்.

P. சிவனேசன்
கோண்டாவில்.

# புதிய விழிப்புக் குழுவும் புதுமையான தண்டனையும்

மேற்கு வங்காளத்தில், கசிப்பு, போதைவஸ்து வியாபாரிகளுக்கு எதிராக அங்குள்ள மக்கள் எடுத்துள்ள நடவடிக்கை, புதுமையானதாகவும் முன்மாதிரியாகவும் அமைந்துள்ளது.

கிருஷ்ணநகர் என்னும் பகுதியில் இளைஞர்கள் சிலர் சேர்ந்து விழிப்பு நீதிக் குழு என்னும் அமைப்பின் மூலம், மேற்படி தீங்கு நடத்தைக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். யாராவது கசிப்பு, போதைவஸ்து வியாபாரங்களில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் உடனேயே கைதுசெய்யப்பட்டுத் தண்டனைக்குள்ளாக்கப் படுகின்றனர்; தண்டனையும் விநோதமானது.

தொங்கிக் கொண்டிருக்கும் T வடிவமுள்ள இரும்புச் சட்டங்களில் கை கால்கள், இடுப்பு இறுக்கப்பட்டு தூக்கப்படுவார்! அவ்வேளை சூடேற்றப்பட்ட சட்டங்களில் அவரது உடல் படும்போது, வலி தாங்க முடியாமல் கத்துவார். அவர் மீண்டும் தனது தவறைச் செய்ய மாட்டேன் என்று உறுதி தரும் வரை, அதில் தொங்கவிடப்படுவார். இத்தண்டனைகளுக்கும் இதை இயக்குவிக்கும் விழிப்புக்குழுவுக்கும் அப்பகுதிப் பொலிசார் ஆதரவு காட்டுவதோடு, இத்தகைய குழுக்களை மேலும் பல இடங்களுக்கு விஸ்தரிக்கவும் அனுமதித்துள்ளார்கள்.

காரணம், இதனால் இத்தகைய குற்றவாளிகளின் எண்ணிக்கை பாரிய அளவில் குறைக்கப்பட்டுள்ளதாம்!

# குற்றவாளி நதியா ? கண்டறிய விசாரணைக் குழு

தேம்ஸ் நதியில் ஓடிக்கொண்டிருந்த படகு தற்செயலாகக் கவிழ்ந்ததில் 30 பேர் மாண்டனர். இது ஒரு விபத்து; சந்தேகமில்லை. ஆனால் இந்த விபத்தைப்பற்றிப் பூரண விசாரணை நடத்துமாறு பிரித்தானிய அரசு விசேட ஆணை பிறப்பித்துள்ளது.

அந்த நாட்டில் ஒரு விபத்தேற்பட்டு விட்டாற்கூட விசாரணைக் கொமிஷன்கள் நியமிக்கப்படுகின்றன. ஆனால் நமது நாட்டில் கொலைகள் ......பச்சைக் கொலைகள் நிகழ்ந்தும் அவைபற்றி விசாரணைகளுமில்லை, கேட்பாருமில்லை.

பிரித்தானிய ஜனநாயகத்தைப் பின்பற்றுவதாகக் கூறும் இந்த ஜனநாயக பூமியில் யாரும் இதனைத் திறந்து காட்டுவார்களா? அல்லது பல நூற்றுண்டுகளின் பின்பு புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தான் இவற்றைக் கிளறி உண்மைகளை விளக்க வேண்டுமோ?



கரவெட்டிப் பகுதியொன்றில் பிள்ளையார் வீற்றிருந்து ஞான ஆட்சி செய்கிறார். அங்கு அவருக்கென்று பொலிவோடு விளங்கும் ஆலயம் அமைத்துள்ளார்கள். இக்கோயில் வடமராட்சியில் பிரசித்தமானது. இங்குள்ள பெரியார்கள் இக் கோயிலை மனமார ஆதரித்து வருகின்றனர். கோயிற் திருப்பணிகளுக்கு வருவாய் கிடைக்கும் வகையில் பல வேலி நன்செய், புன்செய் நிலங்களை பிள்ளையாருக்கு நிந்தம் செய்துள்ளார்கள். திருவிழாக் காலங்களில் பிள்ளையார் கதை படித்து, அருள் பெறும் தலைமுறை இன்றும் அங்குண்டு.

தற்போது கோயில் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு கணிசமான, வருமானம் கிடைக்கிறதாம். ஆனால், இது தொடர்பான கணக்கறிக்கைகளும், விபரங்களும் மூடிமறைத்து வைக்கப்பட்டுள்ளன. பரமேஸ்வரனின் தோற்றபேதங்களில் ஒன்றுகிய மூர்த்தியாகப் பிள்ளையார் காட்சியளிப்பதனால், பிள்ளையாரின் வருமான விபரங்கள் 'பரம இரகசிய'மாக வைக்கப்பட்டுள்ளதோ, என்னவோ? அல்லது வேலிதான் பயிரை மேய்கின்றதோ?

இது இப்படியிருக்க, ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் அட்டகாசங்களின் போது, இக்கோயிலுக்குச் சொந்தமான ரூபா 40,000 காணமற் போய்விட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் கோயிலில் வைத்துத் தான் காணமற்போனதாம். இத்தொகை தாக்குதல் நடந்த நேரத்தில் கோயிலுக்குள் தான் இருந்ததா என்பதற்கு விக்கினங்களை (இடையூறுகளை) விலக்கும் விக்னேஸ்வரன்தான் சாட்சி. இவ்விடயம் தொடர்பாக கோயில் நிர்வாகம் மாற்றி அமைக்கப்பட்டதே தவிர, காசை மீளப் பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லையாம். இறை காரியங்களை நிஷ்காமியமாக — பயன் கருதாது—செய்வதே சிறப்புடையது என்று சும்மா விட்டிருக்கிறார்கள்போலும்.

எது எப்படியிருப்பினும், நாமெல்லாம் ஏமாறலாம்; கடவுள் ஏமாறமாட்டார்; அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும்.

உக்கிரன்

# ஒப்பந்தங்களின் உள்நோக்கம் என்ன?

இலங்கை, தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினையால் காலத்துக்குக் காலம் நெருக்குவாரத்திற்குள்ளாகும் ஒவ்வொரு சமயமும் அதற்குரிய பரிகாரங்களாக, "பேச்சுவார்த்தைகள்," 'ஒப்பந்தங்கள்'' என்னும் சண்கட்டி வித்தைகள் அவ்வக்கால சிங்கள இனவாத அரசுகளால் முன்வைக்கப்பட்டு, தமிழ்பேசும் இனம் ஏது என்பதையே தோலுரித்துக் காட்டும். இதை வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்பட்ட ஒப்பந்தப் பரிகாரங்கள் என்று சொல்லப்படுபவை எல்லாம், உண்மையில் சிங்கள இனவாத அரசுக்கு இடைக்கிடை நெருக்கடி, ஆபத்து என்பன ஏற்படும்போது, அந்த ஆபத்து நெருக்கடிக டா-செல்வா ஒப்பந்தத்தைத் தோற்றுவித்தது. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரே, இலங்கைக்கு சமஷ்டி அரசியலே சரியானது எனக் கூறியிருந்த பண்டாரநாயக்கா, இத்தகைய நெருக்கடியின்போது, அதன் சாயல் கொண்ட ஒரு ஒப்பந்தத்தைத் தோற்றுவித்தார். வட-கிழக்குப் பகுதிகளின் நிர்வாக மொழியாக தமிழை ஏற்றும், அவற்றுக்குரிய நிர்வாகத்துக்குப் பிரதேச சபைகளை நிர்ணயிக்கவும், குடியேற்றங்களைக் கண்காணித்துக் கட்



தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்துள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

1957 இல் ஏற்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம்; பின் 1965 இல் நிகழ்ந்த டட்லி-செல்வா உடன்படிக்கை, தற்போது 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஆகியவை இவற்றுக்குச் சான்று.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இடைக்கிடை இத்தகைய ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் ஏற்பட்டும் ஏனிவை நிறைவேற்றப்படவில்லை? ஏனின்னும் தமிழ்பேசுமினம் ஏமாற்றப்பட்ட, ஏமாற்றப்படும் இனமாகவே தொடர்ந்து இருந்து வருகிறது என்பவை, முக்கியமான கேள்விகளாகும்.

இதற்குரிய பதில், இலங்கையின் அரசியல் தலைமை என்பது எப்போதும் இனவாத, அரசியல் சுயலாபம் தேடும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளதைத் தவிர்த்து, தமது இனவாத அரசைத் தக்கவைப்பதற்காக ஏற்பட்டவையாகவே, வரலாறு காட்டி நிற்கிறது.

1957 இல் ஏற்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தமும் இத்தகைய ஒன்றே. பண்டாரநாயக்கா தான் பதவிக்கு வர வேண்டும் என்பதற்காகக் கட்டவிழ்த்து விட்ட தனிச் சிங்கள, பௌத்தமென்னும் இன, மத வாதங்களில் ஊறிய சக்திகளே இவரது பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் குலைப்பதற்குரிய காரணிகளாகவும் இருந்துள்ளன. ஆனால் இச்சக்திகளை, மேற்படி ஒப்பந்தம் கிழித்தெறியப்படச் செய்வதற்குப் பாவித்த நபர் வேறொருவர். அவர்தான் ஜே. ஆர். தொடர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிராக இயங்கிய நபரும் இவரே.

1957 இல் பண்டாரநாயக்காவின் ஆட்சிக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடிகளே, பண்டுப்படுத்தவும் தகைமை கொண்ட சட்டத்தை ஏற்படுத்தவும், மலையக மக்களுக்குக் குடியுரிமை கொடுக்கவும் சித்தமானதொரு அமைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தமாக அது இருந்தது.

ஆனால், பண்டாரநாயக்காவின் திட்டம் நிறைவேறவில்லை. அவர் எச்சக்திகளை அவிழ்த்துவிடுத் தான் பதவிக்கு வந்தாரோ, அச்சக்திகளாலேயே. மேற்படி ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியாமற் செய்யப்பட்டார். இதைச் செய்வித்தவர் ஜே. ஆர்.

□ கே. ஜி. எல். □

1965 இல் டட்லி செல்வா-ஒப்பந்தமும் இந்த விதத்திலேயே முடிந்தது. தமிழ்மொழி விசேட அந்தஸ்து, நீதிமன்ற மொழி, மாவட்ட சபைகள் போன்ற அம்சங்களைக் கொண்ட இவ்வொப்பந்தமும் யு.என்.பி க்குள் நேர்ந்த இனவாத முரண்பாடுகளால் கைவிடப்பட்டது.

1987 இல் ஏற்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் "தமிழ் மக்களுக்காக" இந்தியாவின் தலையீட்டினால், இந்தியாவோடு இலங்கை ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தை இந்தியாவோடு ஏற்படுத்திக் கொண்டவர், பண்டா செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்வதற்கு இனவாத சக்திகளைத் தூண்டி, கண்டிக்குப் பாதயாத்திரை சென்ற அதே ஜே. ஆரே தான்!

ஏற்கனவே தமிழினத்துக்கு எதிராக இயங்கவதையே 'கலை' யாகக் கொண்டிருந்த இவர், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலமும் இதையே செய்ய முனைந்தார். அத்தோடு, நமக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு ஒப்பந்தம் புரிந்த இந்தியா தனது புவிசார் அரசியலையே பிரதானலா நோக்காகக் கொண்டிருப்பதால் நமது பிரச்சினைகள் தீர்க்கப்படுவதையிட்டு அதிகம் கவலைப்படாததொன்றாக இருந்து வருகிறது.

இவையெல்லாம் எதைக் காட்டுகிறது?

சிங்கள அரசியல் தலைமைகள் ஒருபோதும் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க விரும்பியதில்லையென்பதையே, இன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின், தமிழ் இனத்துக்கெதிரான போக்கும், இதையே காட்டுகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சிறிமாவோ தமிழருக்காகப் பரிந்து பேசியவை இதனோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்குரியவை.

ஆனால், தமிழ்பேசுமினத்துக்கெதிராக இயங்கியதில் ஜே. ஆரும், டீ எஸ் சேனநாயக்காவும் முக்கிய மானவர்கள் என □

---

## தலையாலும் காலாலும் நடக்கத் தெரிந்த
# டெங்ஷியாவோ பிங்

1979ஆம் ஆண்டு. தியனென்மென் சதுக்கம் நிகழ்ச்சி: இன்று போலவே மாணவர் எழுச்சி; பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் நிரம்பி வழிந்தனர். சுவரொட்டிகள் நிரம்பி வழிந்தன. கலாசாரப் புரட்சிக் காலத்தில் மாஓவால் இனங்காட்டப்பட்ட அதிகார ஊழல் வர்க்கத்திற்கு எதிராகச் சுலோகித்தனர் மாணவர்கள். அப்போது டெங்ஷியாவோ பிங்கிற்கு ஆதரவாக மாஓவை விமர்சிக்கும் சுலோகங்களுடன். சுலோகங்

□ சு. வி. □□

கள், சுவரொட்டிகள் எல்லாம் டெங்ஷியாவோ பிங்கின் ஆதரவாளர்களாலேயே தயாரிக்கப்பட்டிருந்தன. ஜனநாயக மாற்றத்தை வேண்டிய சுவரொட்டிகள் அதிகம் ஒட்டப்பட்டதால் சதுக்கத்தின் ஒரு பக்கச் சுவர் 'ஜனநாயகச் சுவர்' என்றே அழைக்கப் பட்டது. அதிலே டெங்கினாலேயே தயாரிக்கப்பட்ட தாய்ச் சொல்லப்பட்ட ஒரு சுவரொட்டி வாசகம் இது. "மாஓவை வழிபடு பொருளாக் காதீர் அவருக்கு உரிய இடம் எதுவோ அதையே வழங்குங்கள்."

1989 ஆம் ஆண்டு. பத்து வருடங்களின் பின் அதே தியனென்மென் சதுக்கத்தில், மாணவர்கள் மீண்டும் எழுச்சியுடன். அதே ஜனநாயகச்



சுவர்களில் மீண்டும் சுவரொட்டிகள். அதிக ஜனநாயக உரிமைகள் அவர்கள் கோரிக்கை. முன்பு மாணவர்களை மாஓவுக்கு எதிராகத் தூண்டிய டெங்ஷியாவோ என்ன செய்தார்? சதுக்கத்தினுள் எற நாட்டின் எல்லையை மீறி ரகசியமாய் நுழைவனபோல டாங்குகள் புகுந்து உழுதன ஜனநாயகச் சுவரங்கும் இரத்தக்கறை, 'எதிர்ப் புரட்சியை நசுக்கிவிட்டோம்' என்றனர் ஆட்சியாளர். தொடர்ந்தும் மரண தண்டனைகள் நிறைவேறிக் கொண்டேயிருக்கின்ற பரிதாபம். இதில் விசித்திரம் என்னவென்றால் மாஓவின் படத்தின் மீது மை தெளித்ததற்காகவும் மூவருக்கு முறையே ஆயுள் தண்டனை, 20 வருடம், 16 வருடம் சிறைத் தண்டனைகள் வழங்கப்பட்டமைதான். முன்பு மாஓவை வழிபாட்டுக்குரிய கடவுளாக்க வேண்டாம் என்ற சுலோகங்களை வழங்கியவரும், படிப்படியாக மாஓவின் படங்களை நீக்கிவந்தவரும் டெங்ஷியா

(11ஆம் பக்கம் பார்க்க)

---

## இரத்தம் பீறிடும்
# இராஜகுமாரி

தீவுகளின் ராஜகுமாரி என நேருவால் வர்ணிக்கப்பட்ட இலங்கைத்தீவு—சுவர்க்க பூமி என பேற்குலத்தவர்களால் பாராட்டப்பட்ட இந்த எழில்மிகு இலங்கை—இன்று இரத்தத்தால் வர்ணம் தீட்டப் பட்டு, பிணநாற்றம் வீசுகின்றது.

களனி கங்கையில் பிணங்கள் மிதக்கின்றன காட்டு மரங்கள் செழிக்துவளர மனிதனை உரமாக்கும் விந்தை வளர்கிறது. வீதி போடுவ

□ [illegible]

தற்கு கற்களாக பதிலாய் எலும்புக்கூடுகள், வீதி எங்கும் பரவப்படுகின்றன ஜனநாயகத்தின் பெயரால், சோஷலிஸத்தின் பெயரலும் இப்படி மாறிமாறி மனிதன் மரத்துக்கு உரமாகவும், வீதிக்கு கல்லாகவும் ஆக்கப்படுகிறான்.

கடந்த 12 ஆண்டுகளுள் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதையும் விட பல்மடங்கு அதிக வேகத்தில், இன்று சிங்கள மக்கள் கொல்லப்படுகின்றார்கள். சிங்கள மக்களை இவ்வாறு கொன்று குவிப்பதில் ஒருபுறம் ஜே வி. பி. யும், மறுபுறம் இலங்கை அரசும் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

சிங்களக் கிராமங்களில் வீடு வீடாக இளைஞர்கள் இரவில் கைதுசெய்யப்படுகின்றார்கள். காலையில் வீதிகளிலும், மறைவிடங்களிலும் இளைஞர்களின் சடலங்கள் பரவுண்டு கிடக்கும். இது அரசபயங்கரவாதம் என்று வர்ணிக்கப்படுகின்றது. இதற்கு ஒத்த வகையில் மறுபுறம் ஜே. வி. பி யின் படுகொலை அரசியல்.

இனவாத அரசியல் வாதிகள் சிங்களவர்களின் நெஞ்சங்களில் பாலர் வகுப்பிலிருந்தே இனவாதத்தை ஊட்டி வளர்த்தனர் அதன் விளைவுதான் தீமடங்கிய இன்றைய இரத்தக் களரியாகும். 1971 ஆம் ஆண்டு 14,000 சிங்கள இளைஞர்களை சிறிமா அம்மையாரின் அரசாங்கம் கொன்று குவித்தது. அப்போது தூய பொருளாதாரக் காரணிகள்

(11ஆம் பக்கம் பார்க்க)

# கொம்பியூட்டர் —

## சிந்தனையாற்றலைக் குறைத்து விடுகின்றதா?

இது கொம்பியூட்டர்யுகம். இன்று உலகில் எவ்வளவோ சிக்கலான விஷயங்களைத் தீர்க்க கொம்பியூட்டர் உதவுகின்றது. மனிதன் சிந்தித்துச் செயலாற்றும் திறனை இழந்து விடுவானோ என்று அஞ்சுமளவுக்கு உலகு கொம்பியூட்டர்கள் மயமாகி வருகின்றது. கொம்பியூட்டரின் உற்பத்திச் செலவு பெருமளவு குறைந்துள்ளமையும் அதன் பயன்பாடு விரிவடைவதற்குப் பெரிதும் காரணமாகும்.

□ இ. அனுரதன் □

கொம்பியூட்டர்களை வெகு இலகுவாக இயக்கவும், அதன் செயற்பாடுகளை எந்தவிதமான இடையூறுகளுமின்றி இலகுவாகப் புரிந்து கொள்ளவும் முடியும்.

அமெரிக்காவில் ஏறக்குறைய மூன்று கோடி சிறுவர்கள் கொம்பியூட்டர் திரையின் முன் அதிக நேரத்தைச் செலவடுவதன் மூலம் பாதிக்கப்பட்டு வருவதாக, ஆராய்ச்சியாளர் தெரிவிக்கின்றனர். கொம்பியூட்டர்களை மிக அவதானமாகவும் உன்னிப்பாகவும் சிறுவர்கள் பார்ப்பதன்மூலம், வெகு இலகுவாகத் தமது வேலைகளை முடித்துக்கொள்கின்றனர். ஆனால், வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை சிந்தித்துச் செயலாற்றும் தன்மையைச் சிறுவர்கள் இழந்து விடுகின்றனர் எனக் கருத்துத் தெரிவிக்கின்றார், டொக்ரர் கிரேஞ் போட்.

மனித இனம் உணர்ச்சிகளில் உறுதியற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இக்கால கட்டங்களில் வளர்ந்து வரும் சிறுவர்கள், மனித உணர்வுகளை மதிக்கும் தன்மை அற்றவர்களாக உருவாக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிப் பெட்டிகளையும் பலவிதமான கொம்பியூட்டர்களையும் மிகச் சாதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. சமீப காலமாக மாணவரின் வகுப்பறைக்குள் அதிவேகமாக கொம்பியூட்டர்கள் ஊடுருவி வருகின்றன. மாணவர்கள் கல்விக்காக கொம்பியூட்டர்களையே பயன்படுத்துகின்றனர். அத்துடன் வீடுகளிலும் கொம்பியூட்டர் விளையாட்டுப் பொருட்களையே அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். சுருங்கக்கூறின் யாவும் கொம்பியூட்டர் மயமாகவே சிறுவர்கள் வாழ்க்கை அமைந்துள்ளது. இலகுவில் செயலாற்றக்கூடிய கொம்பியூட்டர்களை அவர்கள் தம்வசப் படுத்தி தமது வாழ்க்கையை நடத்திவருகின்றனர்.

கொம்பியூட்டர் போதை வஸ்துக்குச் சமமானதாகவே இருக்கிறது. இது பாவனையாளரைத் தன்வசப்படுத்தி முழுக் கவனத்தையும் தன்பால் கவர்ந்திழுக்கின்றது. உலகம் நாளாந்தோறும் சிக்கல்களுக்கும் பதற்ற நிலைக்கும் உள்ளாகிக் கொண்டு வருகின்றது. மனித அனுபவங்கள் திடமற்றனவாகக் காணப்படுகின்றன. கொம்பியூட்டர் வசப்பட்டவர்கள் மனித உணர்ச்சிகளைப் புரிந்து கொள்வதற்கு அதிக நேரம் செலுத்த வேண்டியுள்ளது.

கொம்பியூட்டர் பாவனையாளர் மனித மனங்களை இயந்திரங்களின் ஸ்தானத்திலேயே மதிப்பிடுகின்றனர் சிறுவர்கள் தற்போது புத்தகங்களை வாசிப்பதையோ, பிற சிறுவர்களுடன் விளையாடுவதையோ விரும்புவது இல்லை. மனித மனங்களையோ, புத்தகங்களையோ கொம்பியூட்டர் வசப்பட்டவர்கள் மதிப்பதில்லை எனவே தான், கொம்பியூட்டர்களின் பிடியில் கட்டுண்டவர்கள் (சிறுவர்கள்) புத்தக வாசிப்பிற் கவனஞ் செலுத்தாமையினாலும், பிற ஈடுபாடுகளை ஒதுக்குவதனாலும், அவர்களின் சிந்தனையாற்றல் மங்கி வருகின்றது.

கொம்பியூட்டர்களில் அதிக நேரம் கவனம் செலுத்துபவர்களுக்கு கண்களில் எரிச்சல், முதுகு வலி என்பன ஏற்படுகின்றன. அவதானிப்புக் குறைவு, "ஆம் அல்லது இல்லை" என்ற பேச்சுக்களுடன் மனிதத் தொடர்புகள் அற்றுப் போய் விடுகின்றன. இத்தகைய குறைபாடுகளுடன் கோடிக்கணக்கான மக்கள் அமெரிக்காவில் வாழ்க்கையை பலவந்தமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஏறத்தாழ நாலு கோடி முதல் ஆறு கோடி வரையிலான அமெரிக்கர்கள் இயந்திர இயக்கங்களினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சிறார்களின் வாழ்க்கையில் கொம்பியூட்டர்கள் பாதிப்பை ஏற்படுத்தாதவாறு பெற்றோர் கண்காணிப்பாக இருக்கவேண்டும்.

சிறார்களைத் தனிமையில் விட்டுவிடாது நண்பர்களுடன் பழக வழிவகுக்க வேண்டும். முக்கியமாக சிறார்கள், இளைஞர்கள் மட்டில் காணப்படும் கொம்பியூட்டர் மோகத்தைத் தணிக்க தனிமையை அகற்ற வேண்டும்.

இன்று உலகில் எவ்வளவோ சிக்கலான விடயங்களைத் தீர்க்க கொம்பியூட்டர்கள் உதவுகின்றன. எனினும் மனிதனின் சுயமான சிந்தனையாற்றலை கொம்பியூட்டர்கள் மழுங்கடிக்கின்றன. முக்கியமாகச் சிறார்களும், கல்வி கற்கும் இளைஞர் - யுவதிகளுமே கடுமையாகப் பாதிப்படைகின்றனர்.

கொம்பியூட்டர் பிரியர்களுக்கு, குடும்ப அங்கத்தவர்கள் பேச்சுக் கொடுத்து அன்றாட விஷயங்களைப் பேசிக் கொள்ளுதலும் நன்மை பயக்குமெனத், தெரிவிக்கப்படுகின்றது. குடும்ப அங்கத்தவர்களினதும் நண்பர்களினதும் தொடர்பு, சகோதரத்துவ மனப்பான்மைக்கும் மனித உரிமைகளை மதிக்கும் தன்மைக்கும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. □




# ரேடார்:

## இராணுவத்துறைப் பயன்பாடு

ரேடார் என்பது ரேடியோ அலைகளைக் கொண்டு ஒரு பொருளைக் கண்டுகொள்வதற்காகவோ, காற்றிலும் நீரிலும் நிலத்திலும் அப்பொருள் செல்லும் திசை அல்லது அதன் இடத்தை, அல்லது அதன் இயக்கத்தைக் கணிப்பதற்காகவோ அமைக்கப்பட்ட சாதனமாகும்.

□ அனு—சுபா □

ரேடாரானது விஞ்ஞானக் குடும்பத்தில் பிறந்து சமாதான ஆர்வங்கொண்ட விஞ்ஞான ஊழியர்களிடையே தனது பிள்ளைப் பிராயத்தைக் கழித்தது. ஆனாலும் உலகின் மிகப் பெரும் போர்ப்படைகளில் தொழில்நுட்பப் புரட்சியொன்று ஏற்பட்டதன் காரணமாக, இராணுவத்துறையிலும் ரேடாரின் பயன்பாடு அதிகரித்தது. எதிரி நம் கண்ணுக்குத் தெரியவேண்டும். எதிரியின் கண்களுக்கு நாம் தெரியக்கூடாது என்பதுதான் தொன்றுதொட்டு இராணுவத்தினரது கனவாய் இருந்து வந்தது. எனவேதான் இங்கிலாந்தில் ரேடாரானது "முதற்பெரும் இரகசிய ஆயுதமாகக்" கருதப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் ரேடாரைப் பற்றிய எந்த ஆவணமும் "படித்த பின் எரிக்கவும்" என்னும் குறிப்பினைத் தாங்கியிருந்தது.

தற்போதைய நிலையில் மற்றெல்லாத் துறைகளையும் விட இராணுவத்தில் தான் ரேடாரானது பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இராணுவத் துறையில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்ட ரேடார், 'முன் எச்சரிப்பு ரேடார்' (Early-warning radar) ஆகும். எதிரி விமானங்கள் தொலைவில் வரும் போதே அவற்றின் வருகையை. இவ் வகை ரேடார்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இன்றுள்ள முன் எச்சரிப்பு ரேடார்கள் விமானங்கள் மிகத் தொலைவில் வரும் போதே, அவற்றின் திடீர்த் தாக்குதலை முறியடிக்க வல்லன. இன்று, ஒலியை விட வேகமாகச் செல்லும் விமானங்களை இவ்வகை ரேடார்கள் கண்டறிவது கடினம். எனவேதான் இவற்றிற்காகப் 'போர் விமானக் கட்டுப்பாட்டு ரேடார்' எனப்படும் விசேட வகை ரேடார் உள்ளது. ஆனால் இவை முன் எச்சரிப்பு ரேடாரை விடக் குறைந்த தொலைவிற்கே செயலாற்றும்; எனினும் பகை விமானத்தின் இடநிலையைத் துல்லியமாகக் கணக்கிடவல்லது.

எதிரி விமானங்களால் படை விமானங்கள் வாற் பக்கத் தாக்குதலிலிருந்து தப்புவது கடினம். இதனால்தான் விமானத்தின் வாற் பக்கத்துப் பாதுகாப்பிற்காகவே 'வாற் பக்க எச்சரிப்பு ரேடார்கள்' (Tail warning radar) உருவாக்கப் பட்டுள்ளன. வாற் பக்கத்தைத் தாக்க வரும் விமானங்களைக் கண்டறிந்து, இவ்வகை ரேடார்கள் எச்சரித்ததும், வாற் பக்க எச்சரிப்பு ரேடார் பகைப் போர் விமானத்தை நோக்கிச் சுடுகிறது; பகை விமானம் இவ் விதமாகத் தாக்கப்படுகின்றது.

குண்டு பொருத்தப்படும் யுத்த விமானங்கள் கண்ணைச் சூழவுள்ள பக்கங்களிலிருந்து எதிர்ப்பை நோக்கியுள்ளன. எனவேதான் யுத்த விமானங்களிற்கு 'சுற்றிலும் நோட்டமிடும் ரேடார்' (All - round looking search radar) பொருத்தப்பட்டுள்ளது. இவை, பறந்துகொண்டிருக்கும்போதே நிலப்பரப்பிலுள்ள எல்லா இடங்களையும் வரிக் கண்ணோட்டம் (scan) இடுகின்றது.

இவையாவும் ரேடார் திரையில் நிழற்படமாக அல்லது திட்டவரைபோல் தோன்றும். தாக்கப்படவேண்டிய இலக்கின் குத்துயரம், தாக்குவதற்கு வேண்டிய வேகம் முதலியவற்றைக் கணக்கிலெடுத்து ரேடார் திரையில் குறியிட்டுக் காட்ட, பகை இலக்குகள் தகர்க்கப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட ரேடார்களை விட நவீன ரேடார்களும் உண்டு. உதாரணமாக, 'தொலைதூர முன்னெச்சரிப்பு ரேடார்' (Distant early warning radar), 'வேவு பார்க்கும் ரேடார்' (reconnaissance radar), 'தேடும் ரேடார்' (Search - radar), 'துல்லிய அணுகுவழி ரேடார்'(Precision approach radar), 'மோதல் தவிர்ப்பு ரேடார்' (Anti Collision radar) என்பன சில வாகும்.

விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக் கண்டுபிடிப்புகளில் ஒன்றான ரேடார்கள், அழிவுப் பணியில் ஈடுபடுத்தப்படாது ஆக்கப்பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதே, உலக சமாதான விரும்பிகளின் குரலாகும்.

ஆதாரம் :- ரஷ்ய மீர் பதிப்பக "ரேடார் மேலும் சில உண்மைகள்" □

# "உடல்கள், உடல்கள், உடல்கள்"

அண்மையில் சீனாவில் நடந்த மாணவர் போராட்டம். அடக்கப்பட்ட குரூர முறையையும், கொடுமையையும் நேரில் பார்த்தவர்கள் தரும் தகவல்:

ஹுவாங் ஜிங், 'ஹவார்ட்'பல்கலைக் கழக மாணவர்;

நாங்கள் கண்ணீர்ப் புகையையும், றபர் சன்னங்களையுமே எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் இயந்திரத் துப்பாக்கிகளைப் பாவித்ததோடு மக்களின் மேல் ராங்கிகளையே ஏற்றினார்கள். துப்பாக்கிச் சத்தங்களையும் மீறி மக்கள் அழுங்குரல் மேலோங்கியது. நிரை நிரையாக மாணவர் கூட்டம் எழுந்து நிற்பதும், சுடப்பட்டு விழுவதுமாக எத்திசையிலிருந்தும் வேட்டுக்கள் பாய்ந்த வண்ணம் ... நான் அழுவதில்லை. நான் கலாசாரப் புரட்சிக்கு அனுபவப்பட்டவன். ஆனால் இம்முறை அழுதேவிட்டேன் ராங்கொன்றினுள் ஒரு மாணவனது தலை நெரிபட்டபோது கேட்ட சத்தம்; மதில் சுவரின்கீழ் மறைந்திருந்த மாணவர் ராங்கினால் நெரிக்கப்பட்டபோது .... எங்கும் உடல்கள், உடல்கள், உடல்கள.

ஒரு புத்திஜீவி:

காயப்பட்டவர்களுக்கு இரத்ததானம் கேட்டு ஒரு நேர்ஸ் வைத்தியசாலைக்கு வெளியே வந்தபோது சுடப்பட்டார். ராங்குகள் உச்ச வேகத்தில் வந்து மாணவர்கள் தங்கியிருந்த கூடாரங்களை மாணவர்களோடு துவம்சமாக்கின. இத்தாக்குதலை நடத்திய படையினர் சீனாவின் தூரப்பிரதேசத்திலிருந்து வந்திருந்தனர். அவர்களுக்கு சீனப் பாஷையே புரியவில்லை. மேலும் இவர்களுக்கு, தியனென்மென் சதுக்கத்தில் குழுமியுள்ளோரால் பலவித நோய்கள் பரவுவதாகக் கூறப்பட்டு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டதாம். "இத் தடுப்பு" ஊசிகளின் போதையில் அவர்கள் வெறியாட்டம் ஆடினர்.

— நியூஸ் வீக் □

# முள்ளங்கியும கொம்யூனிஸமும்

"போலந்துக் கொம்யூனிஸம் முள்ளங்கி போன்றது. மேல் தோல் மாத்திரமே சிவப்பு; உள்ளே இல்லை. எனது வாழ்நாளில் உண்மையான கொம்யூனிஸ்டுகள் ஒருசிலரையே சந்தித்திருக்கிறேன்."

போலந்து சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர் லெச் வலேசா ஜேர்மன் தினசரியொன்றுக்கு அளித்த பேட்டியில், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது :

"கொர்பச்சேவ், வலேசா, சொலிடாரிட்டி இவையெல்லாம் வெறும் சுலோகங்கள். இவைகள் இல்லாமலேயே காரியங்கள் நடந்தேறும். வலேசாவை நீங்கள் தூக்கிலிடலாம் ஆனால் சரித்திரச் சக்கரம் தொடர்ந்து சுற்றும்."

# இந்து மதமும் தீண்டாமையும்

“இந்துமதம் தீண்டாமையை நியாயப்படுத்துகின்றது” என்பது இந்து மதத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் பிரதானமானது.

ஆலயப் பிரவேச இயக்க காலத்தில் “இந்து மதம் தீண்டாமையை நியாயப்படுத்துகின்றது” என்ற வாதம் ஆலயப் பிரவேசத்துக்கு எதிரானவர்களால் முன்வைக்கப்பட்டது.

இந்தியாவில் தீண்டாமைக்கு எதிரான இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்ட டொக்ரர் அம்பேத்கார் தனது போராட்டத்தில் வெற்றி காணாத விரக்தி நிலையில் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் புத்த மதத்தைத் தழுவினார். “இந்து மதம் தீண்டாமையை நியாயப்படுத்துகின்றது” என்பது அவர் கூறிய காரணம்.

இந்து மதமே தீண்டாமையின் ‘நதிமூலம்’ என்றால் வேறு மதங்களைத் தழுவிக்கொண்டவர்கள் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி நிகழவில்லை. கிறீஸ்தவத் தமிழர்கள் மத்தியிலும் தீண்டாமைக் கொள்கை வேரூன்றியிருப்பதை நம் கண்முன்னாலேயே காண்கிறோம்.

“கால்டுவெல் காலத்தில் மதம் மாறிய நாடார்களும் பிள்ளைகளும் அந்தந்தச் சாதியினராகவே தேவாலயத்தில் பிரித்து வைக்கப்பட்டனர்” என்று 1979 மே மாதத்தில் கோவையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர். நல்லகண்ணு கூறினார்.

சில இந்துமத இலக்கியங்களில், சமூக ஏற்றத்தாழ்வையும் தீண்டாமையையும் நியாயப்படுத்தும் கருத்துகள் காணப்படுவது உண்மையே. அதை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்தமாக இந்துமதத்தின்மீது குற்றஞ்சுமத்துவது மேலோட்டமான பார்வையின் விளைவு. சாதியமைப்பினதும் தீண்டாமைக் கொள்கையினதும் தோற்றத்தைப் பற்றி வரலாற்று ரீதியாக ஆராய்வதன் மூலமே உண்மையை அறிய முடியும்.

## வேத இலக்கியம்:

கி. மு. இரண்டாவது மிலேனியத்தின் பின்னரைப் பகுதியில் இந்தியாவின் முதலாவது வர்க்க சமுதாயம் கங்கைப் பள்ளத்தாக்கில் தோன்றியது. வர்க்க சமுதாயத்தின் தோற்றத்தைத் தொடர்ந்து அரசுகள் தோன்றின.

வர்க்கங்களற்ற புராதன பொதுவுடைமைச் சமுதாயத்தில் வலுவான நெறிமுறைகள் ஏதுமின்றியே மக்கள் வாழ்ந்தனர். வர்க்க சமுதாயத்தின் தோற்றம் மக்கள் மத்தியில் சில இறுக்கமான நெறிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. அத்தேவையின் விளைவே வேத இலக்கியங்கள் எனலாம். அன்றைய அமைப்பின் கட்டுக்கோப்புக்குள் மனித வாழ்வை ஒழுங்கான சீரமைப்புக்கு உட்படுத்தும் பணியை வேத இலக்கியங்கள் செய்தன.

கி. மு. 15 முதல் 5ஆவது நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியை வேதகாலம் என்பர். இக் காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் வேத இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. சம்ஹிதைகள், பிரமாணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷதங்கள் ஆகிய நான்கையும் பொதுவாக வேத இலக்கியங்கள் எனக் கூறுகின்ற போதிலும், சம்ஹிதைகளே அடிப்படை வேதங்கள். அவை இருக்கு வேதம், சாம வேதம், யஜுர் வேதம், அதர்வ வேதம் என்ற நான்காகும். பிரமாணங்கள் முதலிய மற்றைய மூன்றும் காலத்தால் சம்ஹிதைகளுக்குப் பிந்தியவை. சம்ஹிதைகளின் விளக்கங்களாகவும் வியாக்கியானங்களாகவும் தோன்றியவை.

சமூக பொருளாதார அமைப்பு அடித்தளம் என்றும் நீதி நெறிகள், தத்துவங்கள், இலக்கியங்கள் போன்ற அனைத்தும் அடித்தளத்தால் நிர்ணயிக்கப்படும் மேற்கட்டுமானம் என்றும் சமூக விஞ்ஞானிகள் கூறுவர். அடித்தளத்தின் தன்மைக்கும் தேவைக்கும் ஏற்ற வகையிலேயே மேற்கட்டுமானம் அமைகிறது.

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்புப் பலம் பெற்றிருந்த காலத்தில் முடியுடை வேந்தரைத் தெய்வ நிலையில் வைக்கும் இலக்கியங்கள் தோன்றியதும், நிலப்பிரபுத்துவத்துக்குப் பதிலாக முதலாளித்துவம் தலைதூக்கத் தொடங்கிய காலத்தில் வணிகமகள் கண்ணகியின் கற்புக் கனலுக்கு முன்னால் முடியுடை வேந்தன் தாழ்ந்து மடிவதைக் காட்டும் இலக்கியம் தோன்றியதும், இதற்குச் சிறந்த உதாரணம்.

சாதிப் பிரிவினையையும் தீண்டாமையையும் நியாயப்படுத்தும் இந்துமத இலக்கியங்கள் அன்றைய சமூக பொருளாதார அமைப்பாகிய அடித்தளத்தினால் நிர்ணயிக்கப்பட்ட மேற்கட்டுமானமே என்பதனால், சாதிப் பிரிவினையும் தீண்டாமையும் இந்துமதத்தினாலன்றி அன்றைய சமூக பொருளாதார அமைப்பினால் உருவாக்கப்பட்டவை என்பதே பொருத்தமானது.

பிற மத இலக்கியங்களில் தீண்டாமைக் கருத்து இல்லாததற்கு அக்காலத்தில் இந்தியாவில் வேறு மதங்கள் இல்லாததே காரணம்.

## வர்ணாசிரமம்:

வர்ணாசிரமக் கோட்பாடு வேத மூலவர்களால் வகுத்தளிக்கப்பட்ட நெறி முறைகளில் ஒன்று.

உழைப்புப் பிரிவினையின்றி எல்லாரும் எல்லாத் தொழிலும் செய்து வந்த மக்களிடம் கூடுதலான தொழிற் திறமையும் தேர்ச்சியும் ஏற்படவாய்ப்பிருக்கவில்லை. குறிப்பிட்ட பிரிவினர் குறிப்பிட்ட சில தொழில்களை மாத்திரம் தொடர்ந்து செய்து வருவதன் மூலம் அத்தொழில்களில் அவர்களுக்குக் கூடுதலான திறமையும் தேர்ச்சியும் ஏற்பட்டுத் தொழில் வளரும் என்பதனாலேயே வர்ணாச்ரமக் கோட்பாடு தோன்றியது.

அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தவும் அறநெறிகளை ஆக்கிப் பேணவும் பிரம்ம வர்ணமும், தேசத்தைப் பாதுகாத்துப் பரிபாலிக்க ஷத்திர வர்ணமும், பொருளாதாரத் துறைகளான வணிகம், விவசாயம் போன்றவற்றின் வளர்ச்சிக்காக வைசிய வர்ணமும், தேர்ச்சி பெறாத தொழிலாளர்களாகச் சூத்திர வர்ணமும் என மக்கள் நான்கு வர்ணங்களாகப் பிரிக்கப்பட்டனர். வர்க்க சமுதாயத்தின் தோற்றக் காலத்தில் ஒவ்வொரு பிரிவினரும் பெற்றிருந்த செல்வாக்குக்கு ஏற்பவே வர்ணங்களில் சேர்க்கப்பட்டனர்.

**சிவா சுப்பிரமணியம்**

வர்ணாசிரமம் உழைப்புப் பிரிவினையை ஏற்படுத்தியதேயொழிய, வர்ணாசிரமக் கோட்பாடோ வேதங்களோ மக்கள் மத்தியில் உயர்வு தாழ்வை நியாயப்படுத்தவில்லை. அக்காலத்தில் வெவ்வேறு வர்ணத்தினருக்கிடையில் திருமண உறவுகள் கூட இடம்பெற்றன.

எனினும், வேதங்களுக்குப் பின் தோன்றிய இந்துமத இலக்கியங்கள் சாதியமைப்பையும் சமூக உயர்வு தாழ்வையும் நியாயப்படுத்துகின்றன. சூத்திரர்கள் மற்றைய மூன்று வர்ணத்தினருக்கும் தொண்டு செய்ய வேண்டியவர்கள் என்றும், ஒரு சூத்திரன் தனது எசமானின் சொத்து என்றும் அயிதிரேய பிரமாணத்தில் சொல்லப்பட்டிருப்பதை உதாரணமாகக் கூறலாம்.

அதற்கான காரணத்தைப் பார்ப்போம்.

## சாதிகளும் தீண்டாமையும்:

அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தி நெறிமுறைச் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்ட பிராமணர்களும் (பிரம்ம வர்ணம்), பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட அரசர்களும் (ஷத்திர வர்ணம்) பொருளுற்பத்தியில் நேரடியாகப் பங்கேற்கவில்லை. எனினும், அன்றைய சமூக அமைப்பில் அவர்களின் பணியும் தேவையானதாக இருந்ததால் சமூக உற்பத்தியில் குறிப்பிட்ட ஒரு பங்கு அவர்களுக்குப் பிரித்துத் தரப்பட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டது. எவ்வளவு பங்கு தரப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதும் அவர்களே என்பதால் காலப்போக்கில் உழைப்பின் உபரி முழுவதும் அவர்களுக்கே உரியதாயிற்று.

ஒரு வர்ணத்தினர் குறிப்பிட்ட தொழில்களையே தொடர்ந்து செய்து வந்ததால் அவற்றில் அவர்களின் தேர்ச்சியும் திறமையும் வளர, அதன் விளைவாக உற்பத்தி பெருகியது. உபரி அதிகரித்தது. இதனால் செல்வச் செழிப்பில் மிதக்கத் தொடங்கிய பிராமணர்களும் அரசர்களும் தாங்கள் உயர்வானவர்கள் என்பதை மற்றையோரை ஏற்க வைப்பதற்காக ஒருவருக்கொருவர் ஒத்தாசையுடன் செயற்பட்டனர். நேரடி உழைப்பாளர்களான சூத்திரரை அடிமைகளாக நடத்தினர்.

அரசர்களிடம் செல்வம் குவியத் தொடங்கியதும் மேலும் செல்வம் சேர்க்கும் நோக்கில் யுத்தங்களும் அவற்றின் விளைவாகப் பேரரசுகளும் தோன்றின. யுத்தங்களுக்கும் பேரரசுகளின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் பெருமளவு செல்வம் தேவைப்பட்டதால் மேலும் உற்பத்தியை அதிகரித்துக் கூடுதலான உபரியைப் பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

உற்பத்தியில் கூடுதலான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உழைப்பாளர்களின் சுதந்திர உணர்வும் தன்னிச்சையான ஊக்கமும் அவசியம். எனவே, நேரடி உழைப்பாளர்களான சூத்திரர்கள் அடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அடுத்த நடவடிக்கையாக, ஒரு வர்ணத்துக்குரிய தொழில்கள் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவ்வர்ணத்தினரும் அதற்கேற்ற வகையில் பிரிக்கப்பட்டனர். இந்தப் பிரிவுகளே சாதிகள். ஒவ்வொரு சாதியினரும் தமக்கென ஒதுக்கப்பட்ட தொழிலையே தொடர்ந்து செய்தல் வேண்டும் என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. ஒரே தொழிலைத் தொடர்ச்சியாகச் செய்வதன் மூலம் மிகக் கூடுதலான திறமையையும் தேர்ச்சியையும் பெறமுடியும் என்பதே இதற்குக் காரணம்.

பொதுவான பொருளுற்பத்தி துரிதமாக வளர்ந்தது. உழைக்காமல் உழைப்பின் பெரும் பகுதியை அனுபவிக்கும் நிலையிலிருந்த பிராமணர்களும் அரசர்களுமே இவ்வளர்ச்சியினால் பலனடைந்தனர். இந்த நிலை தொடர வேண்டுமானால் சாதிகள் சமத்துவ நிலையில் ஐக்கியப்படாதிருக்க வேண்டும் என்பதை உணர்ந்த அவர்கள் அவ்விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்தினர். அறநெறிகளை ஆக்குபவர்களும் நடைமுறைப்படுத்துபவர்களும் அவர்களே என்பதால், முற்பிறப்புக் கர்மவினையே இப்பிறப்பின் உயர்வும் தாழ்வும் என்ற கருத்தை வலியுறுத்திச், சாதிப் பிரிவினையையும் தீண்டாமையையும் நியாயப்படுத்தும் தத்துவங்களும் நீதிக் கதைகளும் வேதங்களுக்குப் பிந்திய இலக்கியங்களில் இடம்பெறத் தொடங்கின.

உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் கொண்டுவரப்பட்ட சாதிப் பிரிவினை, பிறப்பின் அடிப்படையிலான — கடவுளின் விருப்பத்துக்கமைவான — சாதிப்பிரிவினை எனத் திரிபுபடுத்தப்பட்டது. உபரி முழுவதையும் தமதாக்கிக் கொண்ட பிராமணர்களும் அரசர்களும் தங்கள் சுயநல நோக்கங்களுக்காக இந்த திரிபுபடுத்தலைச் செய்தனர்.

## காலத்துக்கேற்ற மாற்றம்:

அன்றைய சமூக பொருளாதார அமைப்புகளின் கட்டுக்கோப்புக்குள் பொருளுற்பத்தியில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முதலில் வர்ணாசிரமமும் பின்னர் சாதியமைப்பும் தேவையானவையாக இருந்தன. இன்றைய சமூக பொருளாதார அமைப்பில் தொழில் வளர்ச்சிக்கு அத்தகைய தேவை இல்லை.

“ஆன்மீகத் துறையில் அனந்தராம தீட்சிதர் மட்டுமில்லை; கிருபானந்தவாரியாரும் இருக்கிறார் — அரசியலில் காமராஜர் மட்டுமில்லை; ராஜாஜியும் இருக்கிறார்” என்று கவிஞர் கண்ணதாசன் கூறியது போல, எல்லாச் சாதியினரும் எல்லாத் தொழிலிலும் தேர்ச்சி பெறக்கூடிய சமூக அமைப்பிலேயே நாம் வாழ்கிறோம்.

காலத்துக்கேற்ப உருவாக்கப்பட்ட சாதியமைப்பு காலத்துக்கேற்ப நீக்கப்பட வேண்டியதே நியாயமானது. இல்லையென்றால், ஆற்றைக் கடக்க உதவிய ஓடத்தை வீதியிலே நடக்கும் போதும் தூக்கிச் செல்லும் முட்டாள்களைப் போல ஆகிவிடுவோம்.

தைத்திரீய பிரமாணத்தில் சான்றுகள் காணப்படும் புருஷமேத யாகம் காலத்துக்கு ஒவ்வாதது எனஇப்போது கைவிடப்பட்டதைப் போல — உடன்கட்டை ஏறுதலும் பாலிய விவாகமும் இப்போது தர்ம நெறிகளாக ஏற்றுக்கொள்ளப் படாததைப் போல — பொல்லாக் கொடுமையாகவும் சமூகத்தின் களங்கமாகவும் மாறிவிட்ட சாதியமைப்பும் தீண்டாமையும் சமுதாயத்திலிருந்து முற்றுமுழுதாக மறைதல் வேண்டும்.

இன்றுங்கூட இந்துமத இலக்கியங்களிலிருந்து தீண்டாமைக்கு நியாயங் காட்டுபவர்கள் இந்து மதத்தைக் களங்கப்படுத்துபவர்களே. □

# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் தேசியஇனப் பிரச்சினையும்

கடந்த சில மாதங்களாக 'தேசியஇனப் பிரச்சினைக்கதைகள்' பற்றிய, வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினோம்.

ஈழத்துக் கலை, இலக்கிய, அரசியல் வரலாற்றுப் பின்னணியில் இத்தகைய படைப்புகள் பற்றிய மேலதிக விபரங்களைத் தரும் நோக்குடன், இக் கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது.

தெல்லிப்பழை கலை, இலக்கியக் களம் ஒழுங்கு செய்த சிறுகதை நாள் (17-7-88) நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட இக் கட்டுரை, பின்னர் அலை சஞ்சிகையில் வெளியிடப்பட்டது.

இரு அமைப்புகளிற்கும் எமது நன்றிகள்.

---

தேசியஇனப் பிரச்சினையும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும் என்கிறபோது, ஒரு தேசிய இனம் என்ற ரீதியில், தமிழ் மக்களிற்குக் காலத்திற்குக் காலம் இலங்கையில் இழைக்கப்பட்ட பாரபட்சங்களும், அவர்கள் மீதான ஒடுக்கு முறைகளும் சிறுகதைகளில் எவ்வாறு இடம்பெற்றிருக்கின்றன என்பதே, பெறப்படுகின்றது. தமிழர்கள் ஒரு தேசிய இனமா? அவர்கள் இழந்த உரிமைகள் ஏதாவது உண்டா? என்ற கேள்விகள் முன்பு சிலரிடம் இருந்தனவாயினும், அவ்வாறு கேட்போர் யாரும் இன்று இல்லை.

1947 ஆம் ஆண்டிலிருந்து, திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் பறிக்கப்பட்டு வந்தன. 1948 இல் மலையகத் தமிழர்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது. 1956 இல் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது; அதையொட்டிய கலவரத்தில், தமிழர்கள் 150 பேரளவில் கொலைப்பட்டனர். 1958 இல் பெரிய இனக் கலவரம். 1961 இல் சாத்வீகமான சத்தியாக்கிரகப் போராட்டம் இராணுவத்தால் முறியடிப்பு. 1972 இல் சிங்கள மொழிக்கும், பௌத்தத்திற்கும் முதன்மை கொடுத்து தமிழர்களின் சிறிய பாதுகாப்பினையும் இல்லாமலாக்கும் அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்தது; அதே காலங்களில் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புக்களைத் தகர்க்கும் தரப்படுத்தல் திட்டத்தினது அறிமுகம். 1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தாக்குதல். 1977 இல், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு — ஆயுதப் படைகளின் ஒத்துழைப்புடன் — தமிழர்மீது நடத்தப்பட்ட இன வன்முறை. 1981 இல் தமிழ்ப் பிரதேச நகர்கள் எரிக்கப்பட்டன. 1983 இல் முன்னரெல்லாவற்றையும் விடப் பெரிய இனக்கலவரம். அதன் பின்னர் தீவிரப்படுத்தப்பட்ட இராணுவத் தாக்குதல்களும், ஒடுக்குமுறைகளிற்கெதிராக விடுதலை இயக்கங்கள் முன்னெடுத்த போராட்டமும், அரசுப் படைகளால் மக்களின் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டூழியங்களும் நிகழ்ந்தன. தமிழ்மக்கள் மரணத்துள் வாழ்ந்தனர். 1987 ஜூலை இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் பிறிதொரு பரிமாணம் ஏற்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சி, ஆரம்பத்திலிருந்தே தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளிற்காகவும் குரலெழுப்பி வந்தது. முக்கியமாக, பாரம்பரியப் பிரதேசங்கள் என்பதை அதுவே வலியுறுத்தி வந்தது. பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாக மாறி தனிநாட்டுக் கோரிக்கையினையும் முன்வைத்தது: 1977 இல் தமிழ் மக்களின் அங்கீகாரமும் கிடைத்தது. ஆரம்பத்தில தமிழ் மக்களிற்காக குரலெழுப்பி வந்த இடதுசாரிக் கட்சிகள், சிங்கள பௌத்தப் பெருந்தேசியவாத உணர்வலைகளின் முன்னால் 1960 களில் சரணடைந்தன. இலங்கையின் முக்கிய—சுதந்திர–மார்க்சிய ஆய்வாளர்களில் ஒருவரான கலாநிதி குமாரி ஜயவர்த்தனா இந் நிலைமைகளைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"1965 ஆம் ஆண்டுகளில் பிரதான இடதுசாரிக் கட்சிகள் இனவாத அரசியலைச் சரணடைந்தன. 1970 ஆம் ஆண்டுகளிலும் 1980 இன் முற்பகுதியிலும் சிங்கள மேலாதிக்கவாதத்தின் ஆதிக்கம், சமூகத்தின் சகல வர்க்கத்தினரிடையேயும் செறிந்து பரவியது. தொழிலாளர் வர்க்கக் கட்சிகளுடைய கொள்கைகள் மேலாதிக்கம் பெற்று மக்களால் பரவலாகப் படிக்கப்பட்ட இடதுசாரிப் பத்திரிகைகளால் இனவெறி ஊக்குவிக்கப்பட்டது. நகர்ப்புற, கிராமப்புற சிங்களத் தொழிலாள மக்களிடையே இடம்பெற்ற இனவாதக் கருத்தியலுக்கு எதிராகச் செயற்படுவது கடினமாயிற்று." (இலங்கையின் இன வர்க்க முரண்பாடுகள். பக். 131–132)

இன்னொரிடத்தில்: "எஸ். எல். எவ். பி, எல். எஸ். எஸ். பி., கொம்யூனிஸ்ற் கட்சி ஆகியவை இணைந்த சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி 1970 ஆம் ஆண்டு, யாப்பு ரீதியான வெற்றி பெற்றது. நெருக்கடி நிலையை அடைந்த இனப் பிரச்சினைக்கு அவ்வரசு தீர்வு ஏற்படுத்தும் என நம்பப் பட்டது. ஆனால் சிறுபான்மையினர் இக் கூட்டரசின் காலத்தில் (1970—1977) ஏமாற்றமேயடைந்தனர்...... எதிர்பார்க்கப்பட்ட 'சோஷலிச ஜனநாயகம்' சிறுபான்மையினரின் பார்வையில் சிங்களப் பௌத்தர்களுக்கு மட்டும் உரியதாக அமைந்தது. இதனால், அது சோஷலிசமாகவோ அல்லது ஜனநாயகமாகவோ அமையவில்லை." (மேலது, பக். 148)

1966 ஜனவரி 8 இல் தமிழ் மொழி விசேட சட்டத்திற்கெதிராக "தலதெல், மஸாலவடே அப்பிற்ற எப்பா" ("நல்லெண்ணெய், மசாலவடை எங்களுக்கு வேண்டாம்") என்ற கோஷத்தையும், இவர்கள் முன் வைத்தனர்.

தமிழ்த் தேசியவாத உணர்வுகளை வெளிப்படுத்திவந்த தமிழரசுக் கட்சியோ, பின்னர் வந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியோ கலாசார நிறுவனமொன்றைக் கட்டி வளர்ப்பதில் அக்கறை செலுத்தவில்லை. அவர்களின் பத்திரிகைகளான சுதந்திரனும், சுடரும் ஓரளவிற்கே செயற்பட்டன. கொம்யூனிஸ்ற் கட்சிச் சார்பினைக் கொண்டிருந்த 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' நிறுவன அமைப்பைக் கொண்டிருந்தது. கலை, இலக்கியங்களை 'பிரச்சாரக் கருவிகளாகவும்' அவர்கள் கருதினர். இந்த அமைப்பினர் தமிழ் மக்களிடையில் வழிப்புப் பெற்றுவந்த தமிழ்த் தேசியவாத உணர்வுகளைப் பிற்போக்கானதாக— இனவெ

---

**அ. யேசுராசா**

---

றியாகச்—சித்திரித்தனர். இன, மொழிரீதியான ஒடுக்குமுறைகளை வெளிப்படுத்தும் கலை, இலக்கியங்கள் படைக்கப்படுவதற்கு எதிராக இயங்கினர்; பதிலாக, தேசிய ஐக்கியத்தை முன்னிறுத்தினர். இதன் காரணமாக இன ஒடுக்குமுறை பற்றிய படைப்புகள் சிறுபான்மையாகவும், இடதுசாரி முற்போக்காளர் வற்புறுத்திய சாதி, வர்க்கப் பிரச்சினைப் படைப்புக்களே, பெரும்பான்மையாகவும், வெளிப்பட்டன. ஒருவகையில் இங்கு 'யதார்த்தம்' தலைகீழாக மாற்றப்பட்டிருக்கிறது. இதனையே, "தமிழர் தேசிய ஒடுக்கல், விழிப்புணர்வு பற்றி இலக்கியம் படைத்தால் இனவாதம் பேசுகிறோம் என்று கூறி, சிங்களப் பெருந்தேசியவாதத்துக்கு அடிமையாகிப் போன இலக்கிய விமர்சகர்களின் புண்ணியத்தால் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை வெளிக் கொணரும் ஓரிலக்கியம் வளராமல், முளையிலேயே நசிந்து விட்டது." என திருமதி நிர்மலா நித்தியானந்தன் 'ஒரு கோடை விடுமுறை' நாவலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

1975 இல் சுடர், அலை போன்ற சஞ்சிகைகளின் தோற்றத்தோடுதான் தேசிய இனப் பிரச்சினை இலக்கியத்தில் இடம்பெற வேண்டும் என்ற கருத்துக்கள், அழுத்தம் பெறத் தொடங்கின. 1983 இனக் கலவரத்தின் பின்னர், குறிப்பாக 1985 மத்தியின் பின்னர் மேலும் பரந்த அளவில், இது முக்கியத்துவம் பெற்றது.

1975 இற்கு முந்திய படைப்புக்கள் தொகுக்கப்படாததால் அவைபற்றிச் சரியான கணிப்புக்களை எடுப்பது கடினமாகவுள்ளது. சிலவற்றைத் தவிர பலதையும் வெறும் தகவல்களாகவே அறியமுடிகிறது. இத்தகைய பின்னணிகளில் படைப்புக்களை நோக்கும் போதும் இலக்கியத் தன்மைக்கு — கலைத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க

## ஈழச்சாரல்

வேண்டியது அவசியமானதாகும். 'ஒரு நூலினை இலக்கியம் என்று ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்று தீர்மானிப்பதற்கு, முதலில் அந்நூல் இலக்கியமா இல்லையா என்பதனை நிர்ணயித்த பின்புதான், மார்க்சியக் கோட்பாட்டைக் கொண்டு அதனை மதிப்பிடுதல் வேண்டும்' என்ற ரொட்ஸ்கியின் கூற்றை இங்கு நினைவு கூர்வது பொருத்தமானதாகும். கடந்த காலங்களில் 'வெறுமனே உள்ளடக்கத்தைப் பார்ப்பதே' மேலாதிக்கங் கொண்டிருந்தது. இன்று அதன் தவறான தன்மை பற்றிய புரிதல்கள் பல மட்டங்களில் ஏற்படத் தொடங்கியுள்ளமையும், கவனிக்கத்தக்கது. வசதி கருதி சில பிரிவுகளின் கீழ் சிறுகதைப் படைப்புக்களை நோக்குகிறேன்.

### 1) பிரஜா உரிமைப் பிரச்சினை

அ) காளிமுத்துவின் பிரஜா உரிமை என்ற கதையினை அ. செ. மு எழுதியுள்ளார். பிரஜா உரிமையைப் பெற்றுவிடுவதில் காளிமுத்து அந்தரப்படுகிறான்: ஆனால் அதிகாரிகள் பலவற்றாலும் திருப்திப்படவில்லை; மேலும் அத்தாட்சி கேட்கின்றனர். அரச மரத்தின் கீழ் அவனது பாட்டன் புதைக்கப்பட்டிருந்தான். மரத்தைத் தறித்து அசனடியில் ஆம்வசமாகக் கிடங்கு கிண்டியவன், அதனுள் அகப்பட்ட கை எலும்பை அதிகாரிகளிடம் அத்தாட்சியாகக் காட்டுகின்றான். அவர்கள் அவனுக்குப் பைத்தியமெனச் சொல்கின்றனர். சில இடங்களில் பேச்சு வழக்கு இயல்பாக இல்லை. ஆனால் பிரஜா உரிமை பற்றிய அவனது தவிப்பு எம்மில் பரவுவதில், நல்ல கதையாகிவிடுகிறது.

ஆ) செந்தூரன் எழுதிய உரிமை எங்கே? சிறுகதையில் சுப்பையா நாயக்கர் தனக்கும், குடும்பத்தாருக்கும், பிரஜா உரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கண்டி அலுவலகத்திற்குப் போகிறார். ஆனால் அவரது மகிழ்ச்சி நொருங்குகிறது. உரிமை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விளைந்த மகிழ்ச்சியும், ஏமாற்றமும் இதில் நன்கு சொல்லப்படுகிறது. ஆயினும் இறுதிப் பகுதி கருத்துக்கொட்டலாக — பிரச்சாரமாக வீழ்ச்சியடைகிறது.

### 2. சிங்களக் குடியேற்றங்களால் தமிழ்ப் பிரதேசங்கள் பறிபோவது

திருகோணமலைக்குப் போய் மூன்றுநாட்கள் நின்ற சிவம் அது சிங்கள மயமாகிவிட்டதை எரிச்சலோடு உணர்வதை, சாந்தனின் 'அந்நியமான உண்மைகள்' (1975) சொல்கிறது. நன்றாகச் சொல்லப்பட்டுள்ளபோதும், மேலெழுந்தவாரியான உணர்வே அதில் வெளிப்படுத்தப் படுகிறது. அரச உதவியுடன், திட்டமிட்ட ரீதியில் நடைபெறும் செயற்பாட்டின் விளைவு இது என்ற உணர்வு கோடி காட்டப்படாதது, இக்கதையின் முக்கிய பலவீனம். சரியான பார்வையின்மையே இதன் காரணம். வெள்ளவத்தையில் தமிழர்களை அதிகமாகக் காணும் ஒரு சிங்களவரும் இக் கதாநாயகனைப் போல் ஆத்திரப்படலாம். சாந்தனின் பார்வை இதனையும் நியாயப்படுத்துவதற்குத் துணை செய்வதாய் உள்ளது. உண்மையில் திருகோணமலையின் நிலை அதிலிருந்து வேறுபட்டது.

### 3. மொழிப்பிரச்சினை

அ) சாந்தன் எழுதிய 'கிருஷ்ணன் தூது' (1981) ஓர் அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்தின் கடிதத் தலைப்பில் சிங்களத்துடன் தமிழும் இடம்பெறுமையை சுட்டித், தமது உரிமையை நிலைநாட்ட முயலும் சில தமிழ் ஊழியர்களின் நடத்தையைச் சித்திரிக்கிறது. சிங்களவர்கள் 'தமிழ்' பற்றிக் காட்டும் அலட்சியம், தவறான மனோபாவம், பயந்த தமிழர்களினதும் சிங்கள அதிகாரியினதும் ஊசலாட்டம் போன்றன செப்பமான மொழியில், இறுக்கமாகவும் தாக்கமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. நன்றாக வந்துள்ள கதையாகும் இது. "தென்னிலங்கை மக்கள் இவ் விடயம் – அரச கரும மொழியின் சம அந்தஸ்து – தமது முகத்தில் அறைவதாய் உணர்ந்தனர்" என்று 1956 இல் பண்டாரநாயக்க சொன்ன கருத்தும் நினைவுக்கு வருவதில், எனக்கு இக்கதை மேலும் முக்கியம் பொருந்தியதாய் ஆகிவிடுகிறது.

ஆ) அப்பே லங்கா என்றொரு கதையைப் புதுமைலோலன் எழுதியிருப்பதாய்த் தெரிகிறது. தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்தவர்களை அடக்க அரசு காடையர்களைப் பயன்படுத்துவதை, அது சித்திரிக்கிறதாம்: படிக்கக் கிடைக்கவில்லை.

இ) மனிதர்கள் - மனங்கள் - மானங்கள் என்ற கதையைச் சாந்தன் எழுதியுள்ளார். சிங்களச் சோதனை எழுதும் அரச ஊழியனைப் பற்றியது இது. கதாநாயகன் கேள்விகளுக்கு நன்றாகவே பதில் எழுதுகிறான். இடையில், தான் சிங்களம் படித்த Miss. பெரேராவைப் பற்றியும் அவள் தன்

(11ஆம் பக்கம் பார்க்க)

**வீரம்**

அப்புவுக்கு வீரம் அதிகம்!
அறுபதிலும்
எப்படித் தீ கக்க
இவர் பேசு கின்றார்!
ஆம்!
போர்முனைக்குக் கூட
போய்விடுவார் போலிருக்கே!

மறந்திட்டன்:
மூத்த மகன் ஜேர்மனியிலையாம்!
மற்றொருவன் கனடாவில்
மகள் நோர்வே போய்விட்டாள்!
பொக்கெற்றில் குறிப்பு —
பொருத்தம் சில பார்க்க!

அப்புவுக்கு வீரம் அதிகம்
அறுபதிலும்
கொப்புளிக்கு தென்ன குறை!

— சோ. ப. □

**பருவகாலப் பறவைகள்**

அன்று
யுத்தப் புழுதி படமுன்பு
சத்தப் புழுதிக்கே
மேற்கே பறந்தனர் — சிபியின்புறுக்களாக
இன்று
வறுமை கழுவ
வட்டி நேயத்துடன்
திரும்பி வந்தனர் — பசியின் கழுகுகளாக

ஏன் ...
தாம் புசிக்க இறைச்சி தேடி
தம் பசிக்கு சீதனமாம் இறைச்சி நாடி

அது ஏன் .....
யுத்த பூமியின் அடியில் ஆண்கள்
நிரம்பல் குறைந்துதான் போயிருக்கும்
அவர் விலை கூடித்தானே போயிருக்கும்
யுத்தப் புழுதி படாத
சுதத மேனியின்விலை கூடித்தானே போயிருக்கும்
அப்போது நெஞ்சம்
ஏங்கி நிமிர்வோரிடம்
எலலாவற்றையும் பறித்திடத்தான்.....

சீ......சிச்சீ..... சிச்சீ......
என்ன இது
சீதனம்தான்
நாகருக்கே வெட்கமும் துக்கமும்
அதனால் திக்குமுக்காடி... திக்குமுக்காடி......
முககாடுகளை முழுதாக அகற்ற
புதிய தோல்கள் கேட்கும்
பழைய விலைகள்.

பணக்காரன் ஏழையிடம் திருடும் புதுச்சடங்கு இது
சிரிபபவன் அழுபவனிடம் பிடுங்கிச் சுருட்டும்
பெரியதனம் இது......
இது தொடரும்
இங்குள்ள எச்சங்களுக்கு அங்குள்ள
மிச்சங்கள் மீண்டும் வரும்
யுத்தங்கள் தொடரும் வரை......
அச்சங்கள் நிலவும் வரை......
மிச்சங்கள் மீண்டும் வரும்!

— சித்தார்த்தன் □

**நீயும் : நானும் !**

மெழுகே!
உனக்குமட்டுந்தானா எரியமுடியும்?
என் தேகமும அப்படித்தானே
உனக்கு மட்டுந்தானா உருகத்தெரியும்
என் கண்களுக்கும் அதுமுடியும்
இழப்பு......
அதுகூட உனக்கு மட்டுமல்ல
என் இதயத்தைக் கேட்டுப்பார்
இருந்தும் —
தியாகத்தின் குறியீடு?
உனக்குமட்டுமே சொந்தம்.
இதெப்படி நியாயமாகமுடியும்?

— ராகுல் □

# ஆண்கள் விற்பனைக்கு




பார்த்திபன்
தென்னாசிய நிறுவனம்
மேற்கு ஜேர்மனி

மேற்கு ஜேர்மனியிலுள்ள தென்னாசிய நிறுவனம் இந்நாவலை வெளியிட்டிருக்கிறது. இது பார்த்திபனின் ஐந்தாவது வெளியீடாகும். இவரது முன்னைய நான்கு நூல்களையும் கூட தென்னாசிய நிறுவனமே வெளியீடு செய்தது. தட்டச்சில் பொறிக்கப்பட்டு, பின்னர் 'போட்டோஸ்டட்' செய்யப்பட்டே இந்நூல்கள் பிரசுரமாகியுள்ளன. இந்நூல்களின் அட்டைகளை அலங்கரிக்கும் ரமணியின் கருத்தாழம் மிக்க நவீன ஓவியங்களும 'போட்டோஸ்டட்' முறையிலேயே பதிவாகியுள்ளன.

எம்நாட்டு வாசகர்களுக்குப் பரந்தளவில் இந்நூற் பிரதிகள் கிடைத்திருக்க முடியாது. எமது 'பிரபல விமர்சகர்கள், ஆண்கள் விற்பனைக்கு என்ற இந்த நாவலை வாசித்திருந்தால், இந்நூல் உலக இலக்கியத் தரததிற்கு ஈடானது எனப் புகழ்ந்திருக்கக்கூடும்! மேம்போக்கான இப் புகழுரைகளால், வித்தியாசமான துடிப்புமிக்க இளைஞரான பார்த்திபனும் தன்னைப் பற்றிய மிகையான கணிப்பீடுகளினால் பாதிக்கப்பட்டிருக்கவும் கூடும். நல்லவேளை அப்படியெதுவும் நிகழவில்லை.

பார்த்திபன் வித்தியாசமான இளைஞன்தான். தன் தாய் நாட்டிலிருந்து எத்தனையோ மைல்களுக்கு அப்பால், அந்நியச் சூழ்நிலையில், அகதி நிலையில் வாழ்ந்து கொண்டு தன் நாட்டைப் பற்றிக் கவலைப்படும் இளைஞன்; தன சமூகத்தைப்பற்றிச் சிந்திக்கும் இளைஞன்; சமூகத்தில் மலிந்திருக்கும் சீர்கேடுகளைப் பற்றிக் கவலை கொள்ளும் இளைஞன்; புதிய சமுதாய மலர்ச்சிக்காகக் கனவு காணும் இளைஞன். அந்நிய நாடுகளில் வாழும் இவரையொத்த எமது இளைஞர்கள் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டியங்கும் போது, ஒரு சிலர் சட்ட விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு எமது சமூகத்துக்கு அவப்பெயரைத் தேடித் தரும் போது, இவர் எமது இனம், மொழி என்றெல்லாம் எண்ணுகின்றார். இவருடைய 'ஆண்கள் விற்பனைக்கு' என்ற இந்த நாவலும் யாழ்ப்பாணத்தில் நிலவும் சீதனப் பிரச்சினையையே மையமாகக் கொண்டெழுந்த நாவலாகும்.

பொதுவாகவே இவரது படைப்புக்கள் சமூக சீர்திருத்தக் கருத்துக்களுக்காகவே உருவாக்கப் பட்டவையாகும். கருத்துக்களை மையமாக வைத்தே கதைகள் கட்டி எழுப்பப்படுகின்றன. இதனால் மனித உணர்வுகள் — அவை கவனமாகச் சித்திரிக்க முயலப்பட்டபோதும் — இரண்டாமிடத்திற்கே போய்விடுகின்றன. உன்னதமான படைப்புக்கள் மனிதனையே சித்திரிக்கின்றன. அவனது எழுச்சி - வீழ்ச்சிகளுடனும், மகிழ்ச்சி— துயரங்களுடனும், நிறைகளுடனும், பலவீனம் — உன்னதங்களுடனும் அவனே சித்திரிக்கப்படுகிறான். பார்த்திபனின் படைப்புகள் இந்த இடத்தில் பலவீனப்படுகின்றன கருத்துகளுக்கும் மனித உணர்வுகளுக்கும் இடையிலான இந்தச் சமனின்மை நிரவப்படுமானால், இவரின் படைப்புக்கள் உயர்ந்ததோர் தளத்திற்குச் செல்லலாம். பார்த்திபனின் அடுத்த கட்டப் பாய்ச்சல், அவ்வாறே அமையும் என்ற நம்பிக்கையை 'ஆண்கள் விற்பனைக்கு' என்ற இந்த நாவல் ஏற்படுத்துகின்றது.

□ சண்முகன் □

யாழ்ப்பாணத்துக் கிராமத்தில் வாழும் இரண்டு இளம் பெண்களின் கதையெனவே 'ஆண்கள் விற்பனைக்கு' என்ற இந்த நாவலைக்குறிப்பிடலாம். பத்மா அறிவிலும் அனுபவத்திலும் மற்றவளைக் காட்டிலும் முதிர்ச்சியானவள். வாழ்க்கைப் போராட்டங்களில் எதிர் நீச்சலடித்து வாழவேண்டும் என்ற வைராக்கியம் கொண்டவள்; கலை இலக்கியங்களில் ஈடுபாடுமிக்கவள்; சமூக சீர்திருத்தங்களில் அக்கறை உள்ளவள். இவளைப் போலவே கலை இலக்கியம் — சமூக சீர்திருத்தம் என்பனவற்றில் ஈடுபாடுள்ள ஒருவனிடம் இவள் மனம் படிகின்றது. ஆனால் அவன் போலியானவன் — சமூக நிர்ப்பந்தங்களுக்கு வளைந்து கொடுப்பவன் என்று அறிகின்ற போது இவள் ஒதுங்கிக் கொள்கிறாள். உமா முதிரா இளம் பருவத்துப் பேதைப் பெண். தன்னுடன் ரியூட்டரியில் படித்தவனுடன் காதல் கொண்டு, அவனுடன் சுற்றித் திரிந்ததின் பின் அவனால் ஏமாற்றப்படுபவள். அவளுக்கு வாழ்க்கையே வெறுத்து விடுகிறது. தற்கொலை செய்யவும் எண்ணுகின்றாள். ஆனால் பத்மாவின் உபதேசங்களால் ஈர்க்கப்பட்டு வாழ்வின் சவால்களை எதிர் கொள்கிறாள். "எப்பவாவது உண்மையான ஆம்பிளை ஆராவது எங்களைச் சந்திக்கு மட்டும் இப்படியே இருப்பம்; சந்திச்சா கலியாணத்தைப் பற்றி யோசிப்பம்."

திருமணவிடயமாக உமாவின் காதலனின் முடிவை அறிவதற்காக, உமாவும் பத்மாவும் அவனைச் சந்திக்குமிடம் தான் இந்த நாவலின் உச்சமெனலாம். அவர்களிடையே நிகழும் உரையாடல் மிகவும் இயல்பாக இந்நாவலில் இடம் பெற்றுள்ளது. பிசிறில்லாத, தர்க்கத்திற்கு முரண்படாத, ஆற்றொழுக்காக அமைந்த இந்த உரையாடற் பகுதியே இந்நாவலின் மிக உன்னதமான அம்சமெனலாம். இதனாலேயே பார்த்திபன் நமது நம்பிக்கையைப் பெறுகிறார்; எம்மைக் கவனிக்கத் தூண்டுகின்றார்.

இவருடைய வசனநடை இயல்பாக, அழகாக அமைந்த பொழுதிலும், இடையிடையே சில 'செயற்கையான வசனங்களும் இடம் பெற்றுவிடுகின்றன. 'தாவரங்கள் உற்சாகமாக ஆவியுயிர்ப்பு செய்து கொண்டிருந்தன.' 'உமா சிரிப்பை உற்பத்தி செய்தாள்.' இப்படியான வசனங்கள் கதையுடனான ஒன்றிப்பைத் தடை செய்து விடுகின்றன.

மொத்தத்தில் இந்த 'முதிரா இளைஞர்' மிகவும் நம்பிக்கைக் குரியவராகத் தெரிகின்றார். இளமையின் இலட்சியத் துடிப்புக்கள் சமநிலை அடையும் போது, வாழ்வின் பல் கோணமுகங்களும் இவருக்குத் தரிசனமாகும் போது, இவர் சிறந்த படைப்பாளியாக உயர்ந்து நிற்பார் □

---

போர்கள், கலவரங்கள் இவை எலலாம் வியாபாரம் தானே. ஒரு கொலை வில்லனை உருவாக்குகிறது. இலட்சக் கணக்கான கொலைகள் கதாநாயகனை உருவாக்குகின்றன. எண்ணிக்கைதான் இங்கே மேன்மையைத் தீர்மானிக்கிறது.

— சார்லி சப்ளின்

நீங்கள் உழைக்கும் போது உயிர்மூச்சு உங்கள் உடலைப் புல்லாங்குழலாக்கி இனிமையான ஓசையை வெளிக் கொணர்கிறது.

— கலீல் கிப்ரான்

மக்களை விடப் புத்தகங்களில் நான் அதிக அக்கறை செலுத்திவிடாமலும்; வாழ்க்கையை விட கலைகளில் நான் அதிக ஈடுபாடு காட்டிவிடாமலும் இருக்க என்னைக் கவனித்துக் கொள்.

— ஹென்றி வான்டைக்

உன்னுடைய சந்ததிகளுக்கு இரண்டு சரியான பாதைகளைக் கற்றுக் கொடு. ஒன்று இலக்கியம், மற்றொன்று விவசாயம்.

— சீனப் பழமொழி

மொழி என்னும் மரத்தில் துளிர்க்கும் இலைகள்தான் சொற்கள். சில சொற்கள் காலப்போக்கில் விழுந்துவிடும்! ஆனால், அந்த இடத்தில் வேறு சொற்கள் முளைக்கத்தான் செய்யும். — பிரன்ச்

அறியாமையை விடக் கேவலமான அடிமைத்தனம் வேறு எதுவுமில்லை.

அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளின் பெயர் சுதந்திரம் — விடுதலை — உரிமை என்றெல்லாம் குறிப்பிடலாம்!

— இங்கர்சால்

நன்றி : மண் (மார்ச் 1989) □

திசை THISAI

சிறுகதைப் போட்டி முதற் பரிசுக் கதை

# கோளறு பதிகம்

பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரம் முடிவடைந்துவிட்டது. அநேகமாக எல்லோரும் வெளியேறிவிட்டார்கள். மாலை மங்க ஆரம்பிக்கும் போதுதான் நான் உள்ளே நுழைந்தேன். ஆஸ்பத்திரிக்கே உரிய அந்த நெடி கனமாக வீசிற்று, கூடவே ஈக்களும் திரிந்தன. நான் O.P.D.க்குள் நுழையும் தருவாயில் எனக்குப் பின்னே ஒரு கனமான வாகனம் உறுமியபடி வந்துநின்றது. தன்னிச்சையாகத் திரும்பிப் பார்த்தேன்.

ஒரு கை வெளியே நீட்டிக்கொண்டிருந்தது.

மணிக்கட்டுக்கு ஓரங்குலம் மேலே, ஒரு எலுமிச்சம்பழத்தைப் புதைத்துவைக்கலாம் எனத்தோன்றும்படி ஒரு பள்ளம் பறித்திருந்தது. அதன் ஓரத்திலிருந்து கிழிபட்டுப் போன தோலோ, தசையோ ஒரு சாண் நீளமுள்ள ஒரு சிவந்த பேப்பர் நாடாபோன்று காற்றில் துடித்தது. மிகுதிக் கரம் முழுக்க காய்ந்த இரத்த ஓடைகள் கறுத்துப் போயிருந்தன. பள்ளத்திலிருந்து உறைந்த களிபோன்ற இரத்தம் சொட்டுச் சொட்டாக பாகுத்தன்மையுடன் ஒழுகித் தரையில் விழுந்தது. தரை அதை அவசர அவசரமாக விழுங்கிற்று.

ஒரு ஸ்ரெட்சரில் பிரேதம் கிடத்தப்பட்டிருந்தது. மறுகரம் சேதமெதுவுமின்றிச் சுத்தமாக இருந்தது. ஆனால் வலிப்பினால் மிகவும் மறுக்கேறி ஸ்ரெட்சரின் ஓரத்தைப் பற்ற வளைந்தது போல் பாவனை காட்டிற்று. ஆனால் விறைப்பேறிய நிலையிலும் அந்தக்கரம் வாளிப்பாகவும் மென்மையாகவும் இருந்தது.

ஒரு பெண்ணின் பிரேதம் தான்.


சனங்கள் சிலர் கூடினார்கள், கூடவே ஈக்களும். ஒரு ஓடலிப் பையன் இன்னொரு ஸ்ரெட்சரை ஓசையெழத் தள்ளியபடி அவசரமாக வந்தான். தோசையைத் திருப்பிப் போடுவதுபோல அசிரத்தையுடனும், இலாகவத்துடனும் பிரேதத்தை தனது ஸ்ரெட்சருக்கு புரட்டிப் போட்டுக்கொண்டு OPD ஐ நோக்கி ஓடினான். அவனுக்கு வீட்டுக்குப் போகும் அவசரம் போலும்.

அவ்வளவாக உயரமில்லை. சாதாரணமாக பெண்கள் வீட்டில் அணியும் உடைகள் அணிந்திருந்தாள். முழங்கால்களுக்குக் கீழே உள்ள வாளிப்பான தசைப்பிடிப்பான கால்கள் விறைத்துப்போய் திகம்பரமாகத் தெரிந்தன. முகம் முழுக்க இரத்தவிளாறுக அடிக்கப்பட்டிருந்தது. இடது புருவத்துடன் கூடவே ஒரு குண்டு பாய்ந்திருந்தது. அவ்விடத்தில் ஒரு புடைப்பு. அதிலிருந்தும் இரத்தக் கூழ் ஒழுகிற்று. மற்றைய குண்டு இடது மார்பில் பாய்ந்திருக்க வேண்டும். சட்டையின் மேல்புறம் இரதத்தில் தோய்ந்திருந்தது. ஈக்கள் மிக ஆவலுடன் மொய்த்தன; கூடவே சனங்களும்.

சேதமாகிப் போன மேல் சட்டையினூடு வெளுப்பான திரட்சியான மார்புத் தசைகள் தெரிந்தன. ஒரு ஆணின் கரத்தையோ, ஒரு குழந்தையின் இதழ்களையோ ஸ்பரிசித்தறியாத மார்பகங்கள்.

ஆகக் கூடினால், இருபது வயதிருக்கலாம்.

O.P.D.யிலிருந்து ஒரு டாக்டரம்மா ஸ்டெதஸ்கோப்பையும்,வார்த்தைகளையும் சுழற்றி வீசிய வண்ணம் வந்தாள். அவளுக்கு நிறைந்த களையான முகம். கூடவே ஒருதாதி, முகம் முழுக்க பருக்களும் பீதியும்.



பிறகு சனங்களும் ஈக்களும். சனங்களுக்கென்ன, எல்லாமே புதினம் தான்! ஈக்களுக்கு ருசி மிகுந்த சாப்பாடு!!

ஆளரவம் அடங்கிக்கொண்டிருக்கும் ஒடுங்கிய நீண்ட ஆளோடிகளினூடாக நடக்க ஆரம்பித்தேன். எனக்கு முன்னே நடுத்தர வயதைக் கடந்த மெலிந்த உயரமான ஒரு பெண்ணும், அவளைத் தாங்கியபடி வேறும் இரு பெண்களும் போய்க்கொண்டிருந்தார்கள். அந்த பெண்ணுக்கு தொடைகளில் ஏதாவது கட்டி புறப்பட்டிருக்க வேண்டும்.வேதனையால் கூனிய முதுகுடன், கால்களைப் பதனமாக எடுத்துவைத்து தள்ளாடித் தள்ளாடி மெல்ல அவள் நடந்து கொண்டிருந்தாள். அவர்களைக் கடக்கும்போது ஓரப்பார்வையால் பார்த்தேன்.

அந்தப் பெண்ணின் முகத்திலுள்ள தசைகள் யாவும் ஒருவாறு கோணிப்போய் துடித்தன. வாயும் கண்களும் அகல விரிந்தன. கண்களில் அதிர்ச்சியும் ஏக்கமும் தேங்கிப்போய்க் கிடக்க, வாய் சில வார்த்தைகளை வெளிப்படுத்த முயல்வதாய் மெல்ல அசைய உன்னியது.

அவளுக்கு நோயல்ல, துக்கம்! தாங்க முடியாத துக்கம். அழுது குழறுவதால் மட்டும் அப்படியான துக்கங்களை முழுமையாக வெளிக்கொணர முடியாது. அநேகமாக அவளது கணவனோ, குழந்தையோ எங்காவது குண்டு வெடிப்பிலோ, துப்பாக்கிச் சூட்டிலோ மிக மோசமாகக் காயப்பட்டிருக்கவேண்டும். இறந்துகூடப் போயிருக்கலாம்.

நான் ஒரு பத்தடி தூரம் கடந்திருப்பேன். பின்னாலிருந்து 'ஐயோ ஐயோ ஐயோ' என ஈனஸ்வரததில் மூச்செடுக்க முடியாத அவதியுடனும் அவசரததுடனும் ஒரு குரல் பிறந்தது. வரவர அது ஸ்தாயி கூடி உரத்த வீரிடல்களாகத் தெறித்தது. ஒடுக்கமான ஆளோடியின் இருபுறமும் உயர்ந்திருந்த சுவர்களுக்குள்ளும், கூரையின்மீதும் திரிகின்ற அசுத்தமான காற்று அந்த அவலக் கூக்குரலினால் மேலும் அசுத்தமாக்கப்பட்டு என் நெஞ்சினுள் புகுந்து கொண்டது.

இன்னும் ஒரு நொடிகூட அந்தக் காற்றை என்னால் சுவாசிக்க முடியாது, என்னால் எதையும் காணமுடியாது. அவசா அவசரமாக திரும்ப நடந்தேன்.

வெளியே, சைக்கிள் பார்க்கின் முன்புறம் தேவனைச் சந்தித்தேன். வெகுகாலத்துக்குப் பிறகு அவனைக் கண்டதில் சிறிய மகிழ்ச்சியும், பெருவியப்பும் ஒருங்கே எய்தினேன். கூடவே கொஞ்சம் பயமும்...

O O

தேவனை நான் கடைசியாகக் கண்டபோது ஒரு நாவலை எழுத ஆரம்பித்திருப்பதாகச் சொன்னான்.

''அரசியலில தோத்தவனும், புறமொதுக்கப்பட்டவனும் இலக்கியத்திலோ அல்லது வேறேதாவது கலைத்துறையிலோ ஈடுபடவேண்டியது அவசியம் ......, மச்சான்'' என்றான்.

பிறகு, "அதுக்கிடையிலை நான் செத்தாலும் செத்துப் போவேன் போல கிடக்கு'' என்றபடி 'ஹோ... ...ஹோ' என போலிக்குரலில் சிரித்தான்.

கூடவே, ''மாட்டன்......'' என சங்கல்பமும் செய்தான்.

அதன்பின் இன்றுதான் அவனைக் காண்கிறேன். முன்னரை விடக் கொஞ்சம் பருத்தும், உற்சாகமாகவும் இருந்தான். வழக்கம் போல இதழ்கள் சிவக்க, வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்தான்.

தேவனை நான் முதன் முதலாகக் கண்டபோது அவனது 'அய்யா'வின் கைகளைப் பற்றிபவண்ணம் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது சிலேற் மிகவும் பழையதாகவும் அழுக்கேறிக் கீறல் விழுந்ததாகவும் இருந்தது. புத்தகம்கூட மேலுறையை உரிந்து விட்டும் பக்கங்கள் எல்லாம் ஓரம் மடிந்தும் காணப்பட்டது. எனது சிலேற்றும் புத்தகமும் புத்தம் புதியனவாய் மிளிர்ந்தன. புத்தகத்திலிருந்து புதிய காகிதத்தின் இனியமணமும், சிலேற்றிலிருநது காய்ந்த மண்ணின் வாடையும் வீசின.

தேவன் பள்ளிக்கூடத்திற்கு ஒழுககாக வருவது கிடையாது. வரும் நாட்களிலும் அநேகமாக வாங்கின் மீது ஏறி நிற்பது கட்டாயமாக்கப்பட்டது. எல்லாப் பாட வேளைகளிலும் அநேகமாக அடி வாங்கினான். கணக்குப்பாட வேளையில் அகோர அடி விழுந்தது. ஆனால் அவன் அழுவது கிடையாது. கல்லுளி மங்கன்போல முழித்துக் கொண்டே நிற்பான். அவன் மிகவும் சகிப்புத் தன்மை வாய்ந்தவன். எனினும், எட்டாம் வகுப்புக்குப் பிறகு அவன் பாடசாலைக்கு வரவில்லை.

அதன் பின், அவனது 'அய்யா'வுக்குப் பின்னால் அவனும் ஒரு பழைய, பெரிய 'கரியர்' பூட்டிய சைக்கிளில் ஓலைப் பறியுடன் வலைகளைப் பொதிந்து ஏற்றியபடி முன்னால் வளைந்தபடி உழக்கிக் கொண்டு 'வீச்சு'க்குப் போகக் காண்பேன். அந்நாட்களில் தான் அவன் வெற்றிலை போடப் பழகியிருக்க வேண்டும்.

தேவனது வீட்டுக்கு ஒரே ஒரு தரம் போயிருக்கிறேன். அது எங்களது வீட்டிலிருந்து முக்கால் மைல் தூரம் தள்ளியிருந்தது. ஒரே ஓலைக் கூரையின் கீழான ஒரு சிறு அறையும், சற்றே அகன்ற காற்றோட்டமான மாலும் தான் வீடு. அறையின் சுவர்கள் தென்னங்கீற்றுகளால் நெருக்கமாக அடைக்கப்பட்ட தட்டிகளினால் ஆனவை. மாலுக்குள் கிடந்த தீராந்திகளிலும் வேலிகளிலும் வலைகள் கிடந்து மீன் நாற்றத்துடன் நாறின. பக்கத்திலே இன்னுமொரு சிறு கொட்டில். அது அடுக்களை. அதற்குள் நுழைவதெனில் ஆள் பாதியாக மடியவேண்டும். எந்நேரமும் அதற்குள் புகை மண்டிச் சுழலும்.

எனக்கு ஒரு பழையவலை அவசியமாகத் தேவைப்பட்டது. எங்களது தோட்டத்தில் நிறைய தக்காளிகள் இருந்தன. கிளிகளின் தொல்லை பொறுக்க முடியாமல் இருந்தது. வலை போட்டால் கிளி விழாது என அப்பு ஆலோசனை சொன்னார். ஆனாலும் ஒரேயொரு கிளியாவது வலையில் விழவேண்டும் என நான் உள்ளூர ஆசை வைத்திருந்தேன். தேவனிடம் வாங்கப் போகும் வலையில் சிறு துண்டொன்றை வெட்டியெடுத்து 'கிளிக்கூண்டு' ஒன்றை செய்யும் உத்தேசமும் எனக்கிருந்தது. அந்த வலையை கிளிகள் அறுக்க மாட்டா, என இரண்டுங்கெட்டான் வயதிலும் பேதமையுடன் நான் நமபினேன்.

□ ரஞ்சகுமார □

மாலின் ஒரு மூலையில் ஒரு பழைய 'சன்லைட்' பெட்டியும், அதற்குள் புத்தகங்களும் கிடந்தன. அவையெல்லாம் தேவனின் புத்தகங்கள். பள்ளிக்கூடத்தில் மாடுபோல அடி வாங்கிய, தேவனால் இவ்வளவு புத்தகங்களைப் படிக்க முடிகிறதா?

பிற்காலங்களில் அவனை அடிக்கடி இலக்கியக் கூட்டங்களில் காண நேர்ந்தது. நான் எண்ணியது போல தேவன் மக்கு அல்ல. அவனது புலன்களும் புத்தியும் வேறு திசைகளை நோக்கித் திருப்பப்பட்டிருந்தன.

இன்னும் கொஞ்சக் காலம் போனதும், அவனது சைக்கிளின் பெரிய 'கரியர்' கழற்றி வைக்கப்பட்டது. அவனது ''அய்யா'' வுக்கும் அவனுக்கும் ஒத்துவரவில்லை. தேவனின் சைக்கிள் விரைந்து செல்லத் தக்கவாறு உருமாற்றப்பட்டது. அத்துடன், ஹான்டிலில் ஒரு பெரிய துணிப்பை தொங்கியவண்ணம் இருந்தது. அது சிறிய ஆனால் கனமான சில பொருட்களைச் சுமந்தது.

ஒரு நாள், அவனது வீட்டின் பக்கமாக இருந்து பெரும் இடியோசை போன்ற சத்தத்துடன் கூடவே புகை மண்டலம் எழுந்தது. தீயில் கருகிய சருகுகள் வெகு உயரத்துக்குக் கிழம்பி காற்றினால் அடித்து வரப்பட்டதையும், பலர்கூடி சத்தமிடுவதையும் கேட்டேன். அதற்குப் பிறகு வெகுநாட்களாக் தேவனைக் காணவில்லை. அவனது 'அய்யா' 'அவனைக் கண்ட இடத்திலை வெட்டுவன்' எனச் சொல்லித் திரிந்தார். அவர்களது சொற்ப சொத்துக்களான வலைகளும், அந்த சிறிய கொட்டில் வீடும், துணிமணி

(9ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழகத்தில்
# பெண்கள் அமைப்பு




கடந்த வருடமளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் 'பெண்கள் அமைப்பு' ஆரம்பிக்கப்பட்டது. சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் பெண்ணிலைவாதம், பெண் விடுதலை போன்ற அம்சங்கள் மலரத் தொடங்கிவிட்ட நிலையில் இது பிந்திய ஆரம்பம் என்றே சொல்லவேண்டும். இவ்வமைப்பு ஒரு வருடம் செயலாற்றி முடித்திருக்கிறது. தொடர்ந்த செற்பாட்டுக்காக தற்போது புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இவர்களின் கடந்த ஒரு வருட செயற்பாடுகள், பல்கலைக்கழகத்தினுள் பெரும்பான்மை மாணவர் மத்தியில் இவர்கள் மீது ஒரு வெறுப்புணர்வையும் பெண் விடுதலை, பெண்ணிலைவாதம் என்பனவெல்லாம் அர்த்தமற்றவை, எதிர்க்கப்பட வேண்டியவை என்ற ஒரு கருத்தை ஆசரிக்கும் பலோபாவத்தையுமே தோற்றுவித்துள்ளன.

நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு இவ்வாறு பிழையான விளைவுகளை ஏற்படுத்தியதற்குக் காரணங்கள் என்ன?

1. துரதிர்ஷ்டவசமாக யாழ். பல்கலைக்கழகத்தின் பெரும்பான்மை மாணவர்கள் தமது விளுத்தாளை இலட்சியமாகக் கொண்டு மட்டும் படிக்கின்ற மாணவர்களாகவே இருக்கின்றார்கள். அதற்கு அப்பால் சமூக நோக்கத்துடன் பல்துறை சார்ந்த ஆற்றல்களையும் விருத்திசெய்ய அவாவும் அறிவார்ந்த சூழல் இங்கு

□ **இறைவன்** □

இல்லை. அவரவரின் துறை சார்ந்த கற்கை நெறியைத் தவிர்த்துப் பார்த்தால், ஒரு மந்த நிலையே மாணவரிடம் நிலவுகிறது ஏற்கனவே பெண் விடுதலை தொடர்பாக அடிப்படைத் தெளிவுகளைத் தம்மிடம் கொண்டிருந்த பெண்கள் அமைப்பினர் அத்தெளிவினடியாகச் செயற்பட்டபோது, இது விடயத்தில் எதுவித தெளிவும் அற்றிருந்த மாணவர்களால் அவர்களின் செயல்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. மாருக, இவ்வமைப்பின் மீது எரிச்சலடைந்தனர். ஆயின் செயற்பாட்டில் இறங்குவதற்கு முன், தமது நிலைப்பாட்டின் நியாயங்களைக் கருத்து ரீதியாக ஊட்டி மாணவர்களிடம் ஆதாரத் தெளிவை ஏற்படுத்த முயற்சி செய்திருக்க வேண்டும். இதைச் செய்ய இவர்கள் தவறிவிட்டனர்.

2. எமது சமூகத்தின் அதே மனப்பான்மைதான் பல்கலைக் கழகத்திற்குள்ளும் பிரதிபலிக்கிறது. பெண்கள் விடயத்தில் மாற்றங்களை ஜீரணிக்கும் பக்குவம் இன்னும் நம் சமூகத்திற்கு வரவில்லை. இந்நிலையில் தாம் செய்வது சரியேயாயினும் சூழ்நிலைப் பொருத்தம் கருதி மாற்றங்களை மெல்ல மெல்ல நிகழ்த்தியிருக்க வேண்டும். மாருக உச்சநிலையில் எடுத்தவுடனேயே இயங்க ஆரம்பித்தபோது, பெண்கள் அமைப்பினரை தீண்டத்தகாத வஸ்துவைப் போலவே மாணவர்கள் பார்க்க ஆரம்பித்தனர்.

3. பெண் ஒரு மனித ஜீவி. ஒரு மனித ஜீவிக்குத் துன்பம் நேர்கையில் அதற்காக மனம் நெகிழவும், அதில் அக்கறை காட்டவும், அதை நீக்குவதற்காக உழைக்கவும் சக மனிதன் என்ற வகையில் ஆணுக்கும் முழு உரிமையுண்டு. அந்த வகையில் பெண் விடுதலைக்காகப் போராடுவதில் பெண் எடுத்துக் கொள்ளும் அதே நிலைப்பாடு, ஆணுக்கும் பொருந்தும். எனவே பெண்கள் அமைப்பு ஆண்களுக்கும் உரித்தான ஒன்று என்பது வெளிக்காட்டப் பட்டிருக்க வேண்டும். ஆனல் அவ்வாறு வெளிக்காட்டப்படவில்லை. மாருக அது ஆண்களுக்கு எதிரானது என்ற தோற்றத்தையே கொடுத்தது.

மேற்கூறிய காரணங்களால் பெண்கள் அமைப்பினர் மாணவர் மத்தியிலிருந்து ஏறக்குறைய முற்றாகவே தனிமைப் படுத்தப்பட்டனர். இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலையில், இவர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருந்ததால் இவர்களால் பல்கலைக்கழகச் சூழலில் தைரியமாகச் செயலாற்ற முடியாது போயிற்று.

இப்போதும் பெரும்பான்மையான பெண்கள் இவர்கள் மீது தீண்டாமையைக் கடைப்பிடிக்கின்றனர். சில விரிவுரையாளர்களும் கூட இவர்களை அங்கீகரிக்க மறுப்பது மிகுந்த வேதனை தருவதோடு, நமது புத்திஜீவித்தனம் குறித்து வெட்கத்தையும் ஏற்படுத்துகிறது.

இவ்விரிவுரையாளர்கள், பெண்கள் அமைப்பின் மீது மாணவர்களுக்கு உள்ள துவேஷ மனப்பான்மையைப் பயன்படுத்தி அவ்வமைப்பையே இல்லாது செய்யும் படிக்கு மாணவர்களைத் தூண்டியும் வருகின்றனர்.

இந்நிலையில் பெண்கள் அமைப்பின் இவ்வருட புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் கொஞ்சம் விழிப்புடன் இயங்க வேண்டியது அவசியமாகும். எப்போதும் ஒரு அமைப்பை ஸ்தாபிக்க முனைகையில் அதன் ஆரம்ப காலம் மிகுந்த வேதனையுடையதாகவே இருக்கும். அந்தச் சோதனைகளை வென்று நீண்ட காலத்தில் பயனளிக்கும் வண்ணம் அவ்வமைப்பை நிலை நிறுத்துவதற்கு, அதன்

(11ஆம் பக்கம் பார்க்க)

## கோளறு...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும், தேவனது புத்தகங்களும் அந்த விபத்தில் நாசமாய்ப் போயின.

அதற்குப் பிறகு, 'ஒப்பந்தம்' முடிந்த கையோடே அவனைப் புத்தகக் கடையொன்றின் முன் கண்டேன். அப்போதுதான் அவன் நாவல் எழுதிக் கொண்டிருக்கும் விஷயத்தைச் சொன்ஞன். அன்று முழுக்க வெற்றிலை கூடப் போடவில்லை என்றும் சொன்ஞன். மிக மெலிந்து போய் இருந்தான். என்னிடம் கொஞ்சம் காசு 'கடன்' வாங்கினுன்.

அதற்குப் பிறகு இன்றுதான் காண்கிறேன். என்னுடன் தங்குவதற்குத் தேவன் விரும்பினுன்.

O O

நான் குடியிருக்கும் வாடகை வீட்டில் பேய்களும் அத்துமீறிக் குடியேறி விட்டதாகச் சொல்கிருர்கள். வீடு மிகப் பெரியது. புதிய 'பாஷனில்' அமைந்திருந்தது. மேல் மாடியில் நான் மட்டும், கீழே ஒரு இளந்தம்பதிகளும், அழகிய துடியான பெண் குழந்தையும். வீட்டின் முன்புறம் 'பாஷனுக்கு' சற்றும் பொருந்தாத வகையில் ஒரு நீற்றுப் பூசணிக்காயில் குங்குமத்தினுல் வரைந்த கோரமுகம் தொங்கியது. பேய்களுக்கு 'சாந்தி' செய்வித்ததை அது கட்டியங் கூறிற்று. சாந்தி செய்த பிறகு பேய்கள் வாலைச் சுருட்டிக் கொண்டனவாம்.

அதற்கு முன்னரோவெனில், தினம்தினம் இருட்டியதும் தாகத்துடன் யாரோ நாவைச் சப்புக் கொட்டுவதும், அங்குமிங்கும் 'தடபட' வென ஓடித் திரிவதும், உபாதைகளுடன் முனகுவதும் என சத்தங்கள் கேட்குமாம். கதவுகளும் ஜன்னல்களும் தம்பாட்டில் திறந்து 'படார்' என சாத்திக் கொள்ளுமாம்.

எனது அறையின் ஜன்னலைத் திறந்தால், பூஞ்செடிகள் வரிசையாக வளர்ந்திருந்த முற்றமும், சுற்றுமதிலும், அநேகமாக மௌனமாகவே இருக்கும் பாதையும் தெரியும் கதவைத் திறந்தால், கால்வட்டமாக வளைந்தபடி மாடிப்படிகள் இறங்கி ஹோலுக்குள் போவதைக் காணலாம். அந்தக் கால்வட்ட விளிம்புடைய சுவரின் சரி பாதியில் ஒரு கண்ணுடி அலுமாரி போல உள்வாங்கிய பீடம் இருக்கிறது. அதர்குள் செப்மஞ்சள் ஒளியில் குளிக்கின்ற கண்ணன் சிலை. வேய்ங்குழலை உதடுகளில் பொருத்தியபடி குறுஞ்சிரிப்புச் சிரிக்கிறது.

அந்தக் கண்ணன் சிலை, இதே வீட்டில் முன்பு நடந்த கோரங்களுக்குச் சாட்சியாக அப்போதும் குழலூதிச் சிரித்திருக்க வேண்டும். வீட்டின் சுவர்களில் எல்லாம் துப்பாக்கிக் குண்டுகள் மழையெனப் பொழிந்ததில் மேற்பூச்சுக்கள் புண்பட்டு மூளியாகிப் போயினவாம். இதே மாடிப்படிகளின் வழியாக இரத்தஓடை குதூகலத்துடன் கீழிறங்கிப் போயிற்ரும். உட்கட்சிப் போராட்டத்தை சில துப்பாக்கிக் குண்டுகள் சப்தித்து முடித்து வைத்தனவாம். மொத்தமாக பன்னிரண்டு பேர்கள் ஒரே இரவில் சில நொடிகளுக்குள் கட்சியினின்றும் உலகத்தினின்றும் வெளியேற்றப்பட்ட பின் மயான அமைதி நிலவிற்ரும். அதற்குப் பிறகு அந்தப் பன்னிரண்டு பேரும் பேய்களாகி விட்டார்களாம். இல்லாத தொந்தரவுகள் எல்லாம் உண்டாக்கிக் காட்டினுர்களாம். இரவானதும் சந்தடிகள் மிகச் செய்து தமக்கிழைக்கப்பட்ட அநியாயத்தைச் சொல்லிப் புலம்பினுர்களாம்.

பிறகு குடியிருக்க வந்தவர்கள் சாந்தி செய்தார்கள். எனக்கும் குடியிருக்க ஒரு அறையும், கொஞ்சம் பயமும் கிடைத்தன.

எனக்குப் பேய் பிசாசுகளில் அவ்வளவு நம்பிக்கை இல்லை தேவனுக்கும் இதையெல்லாம் சொன்னேன்.

"எனக்கு இப்ப ஒண்டிலும் நம்பிக்கை இல்லை மச்சான்" என்ருன்.

தேவனின் 'அய்யா' வின் தகப்பனுர் — இப்போது இறந்து விட்ட அப்பு —பல பேய்க்கதைகளைத் தேவனது சிறுவயதில் சொல்லியிருக்கிருராம். அடிக்கடி அவர் பல பேய்களைப் பேய்க்காட்டிவிட்டு வெறும் பறியுடனும் காய்ச்சலுடனும் வீட்டுக்குத் திரும்பி வந்திருக்கிருராம்.

ஒருநாள், நல்ல நிலவு. அப்பு விடிகாலையில் வீச்சுக்குப் போக ஆயத்தங்கள் பண்ணிவிட்டு படுக்க எண்ணினுர். வெள்ளி காலிக்கும்போது கனகன் வந்து கூப்பிடுவதாகச் சொல்லியிருக்கிருன். அப்பு ஆச்சியிடம் சொல்லிவிட்டு அண்ணுந்து முகட்டு வளையைப் பார்த்தபடி படுத்திருக்கிருர். அன்றிரவு நாய்கள் மிகுதியாகக் குரைத்தன. ஆச்சி சுருட்டுப் பிடித்தபடி சால் உளைவு போக்க முணுமுணுத்தபடி தைலம் தடவுகிருள். சுருட்டின் கார நெடியுடன் தூங்கிய அப்பு குறட்டைவிடலானுர்.

"எடேய்...... கந்தப்பு ...... வாடா......" எனக் கண்டாயத்திலிருந்து கனகன் கூப்பிடுவது போலக் கேட்கிறது. அப்பு எழுந்து ஒரு மிடறு தண்ணீர் குடித்தார். வலைகளைத் தூக்கித் தோளில் போட்ட வண்ணம் ஆச்சியைப் பார்த்தார் ஆச்சி நல்ல நித்திரை. தலைமாட்டில் குறைச் சுருட்டு கருகிப் போய்க கிடக்கிறது. தீப்பெட்டியும், சுருட்டும் வெற்றிலைக் கொட்டப் பெட்டியும், திருநீற்றுச் சம்புடமும், வில்லுக் கத்தியும் எடுத்து 'மடியில' பொதிந்து கொண்டு அப்பு முற்றத்தில் இறங்கினுர். நிலவு வெளிச்சத்தில் கண்டாயத்தடியில் யாரோ நிற்பது தெரிகிறது.

"எடேய்... கந்தப்பு வெள்ளி காலிச்சுப் போட்டுது...... வாடா" என கனகனின் குரல் கேட்கிறது அப்பு மடியைத் தடவிய வண்ணம் அவனுடன் போய்க் கொண்டிருக்கிருர். நிலவு வெளுறி ஒளியிழக்கிறதோ, அல்லது மேகங்கள் மூடி மறைக்கிறதோ? அப்பு வானை நிமிர்ந்து பார்த்தார். விடிவெள்ளி காலிக்க இன்னும் நிறைய நேரம் இருப்பதாகப் பட்டது. பக்கத்தில் வருபவன் சுண்ணும்பு கேட்கிருன். சுண்ணும்பு எடுத்துக் கொடுத்தபோது தான் கனகனுக்கு கால்கள் இல்லாததை அப்பு கண்டார். விக்கித்துப் போனுர். தேகம் 'ஜில்'லிட்டுக் குளிர்ந்தது. எவ்விடத்தில் நிற்கிறேம் என சுற்று முற்றும் பார்த்தார். எதிரே தண்ணீர் மினுங்குகிறது. குளிர் காற்றை அள்ளித் தெளிக்கிறது. மறுபடியும் பக்கத்தில் பார்த்தால், கூடவந்தவனைக் காணேம்!

"கந்தப்பா வீசடா வீசு நல்லா மீன் படும்!" என அசரீரி மட்டும் கேட்கிறது. அப்பு அயதியுடன் நீருக்குள் இறங்கினர். 'தொளப்' என தண்ணீர் குழப்பத்துடன் ஒலியெழுப்ப மேலும் மிரண்டார். அரையில் கட்டிய நான்கு முழத்தையும் 'மடியின்' பாரங்களையும் சேர்த்து தலையில் முண்டாசாகக் கட்டிக்கொண்டார். திருநீற்றை எடுத்து நெற்றியில் தரித்துக் கொண்டு 'வைரவா' என உளமுருகி உரக்கக் கூவினுர்.

"கந்தப்பா......கந்தப்பா..." என கரையிலிருந்து குரல் நைச்சியம் பண்ணிக் கூப்பிடுகிறது. அப்புவுக்கு தேவாரங்கள் நல்ல மனனம். கோளறு பதிகத்தை வரிசைக் கிரமமாக பக்திலயத்துடனும், பயத்தால் நடுங்கும் குரலுடனும் பாடத் தொடங்கினர். பாடுகிருர்... பாடுகிருர்... பயம் பறக்கிறது. விடிவெள்ளி மெல்ல உதயமாகி அப்புவுக்கு தைரியம் சொல்லிற்று தூரே ஊரிலிருந்து கோழிகள் கூவி அப்புவுக்கு சுருதி சேர்த்தன. அப்பு கோளறு பதிகத்தை திரும்பத் திரும்பப் பாடுகிருர். கிழக்கு வெளுக்கிறது. மேனி விறைக்கிறது. அப்பு தைரியமாகக் கரையில் ஏறினுர். உடல் நடுங்குகிறது. நடுங்கியபடியே வீட்டில் வந்து விழுந்தவர் தான். ஒரே குலைப்பன் காய்ச்சல்!

"அட... மேனே, இப்ப உந்த மெஷின் போட்டுகள் கடலுக்குள்ளை ஓடடா ஓடெண்டு ஓடி... பேயும் இல்லைப் பிசாசும் இல்லை... நம்மோடொத்தவனுக்கு மீனும் இல்லை" என்று தேவனின் அப்புவின் கதை முடியுமாம்.

(அடுத்த இதழில் முடியும்) □

# இந்திய-சோவியத் உறவில் வளரும் அதிருப்தி

## உருளும் உலகில்

ஆசியாக் கண்டத்தில் அமெரிக்கா தனது வெளியுறவுக் கொள்கையில் சில புதிய அணுகுமுறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென அமெரிக்க அறிவுஜீவிகள் கருதுகின்றனர். அவ்வாறு கருதப்படுபவற்றுள் பின்வரும் கருத்து முக்கியமானது. அதாவது ஆசியாவில் தென்னுசியா, கிழக்காசியா, தென்



கிழக்காசியா ஆகிய மூன்று பிராந்தியங்களையும் ஒரு பொதுவான மூலோபாயத்துக்குள் உட்படுத்தி அதில் அமெரிக்காவின் மேலாண்மையைப் பேணவேண்டும் என்பதாகும். அதாவது இந்த மூன்று பிராந்தியங்களுள் முதன்மையானது தென்னுசியாவும், கிழக்காசியாவும் ஆகும். ஆனல் இம் மூன்று பிராந்தியங்களுக்கிடையில் ஒருவகைச் சமபலத்தைப் பேண அமெரிக்கா முயல வேண்டும். இதில் இம்மூன்று பிராந்தியங்களுக்கும் இடையில் சமபலத்தைப் பேணும் சக்தியாக அமெரிக்கா நின்று, தேவை ஏற்படும் பட்சத்தில் ஒன்றைத் தூக்கலாக்குவதன் மூலம் தனது ஆதிக்கத்தை அமெரிக்கா நிலைநாட்டக் கூடியதாய் இருக்கும் என்பதே, இதன் அடிப்படையாகும்.

இவற்றுள் தென்கிழக்காசியா தனித்துவமாகப் பலம் பொருந்திய ஒரு பிராந்தியமல்ல. ஆனல் கிழக்காசியாவைச் சமப்படுத்துவதற்கும், தேவையேற்படின் அதனைப் பலவீனப்படுத்துவதற்கும் தென்கிழக்காசியா ஒரு கருவியாகும். அதாவது தென்னுசியாவால் கிழக்காசியாவைச் சமப்படுத்த முடியாத நிலை ஏற்படும்போது, தென்கிழக்காசியாதான் அதில் பெரிதும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகும். இதன் பிரதான அர்த்தம் என்னவெனில், இப் பிராந்தியத்தில் ஒன்றை தேவைக்கேற்ப ஓங்க வைக்கக்கூடிய, அல்லது வீழ்த்தக்கூடிய நிர்ணய சக்தியாக அமெரிக்கா இருக்க வேண்டும் என்பதுதான்.

இம் மூன்று பிராந்தியங்களையும் ஒன்றுக்கொன்று எதிராகப் பயன்படுத்தும் அதே சமபலக் கொள்கைதான், ஒவ்வொரு பிராந்தியத்துக்குள் உள்ள நாடுகளையும் கையாளும் கொள்கையுமாகும். தென்னுசியாவில் பலம் வாய்ந்த நாடு இந்தியா, கிழக்காசியாவில் சீனு, தென்கிழக்காசியாவில் வியற்நாம். இப்பலம் பொருந்திய நாடுகளைச் சமப்படுத்த பக்கத்திலுள்ள பலவீனமான நாடுகளைக் கருத்திற்கொள்வது. இவ்வாறு பிராந்தியங்களுக்கிடையேயும், பிராந்தியங்களுக்குள்ளும் சம நிலையைப் பேண வேண்டும் என்ற கொள்கை முக்கியம் பெற்றுள்ளது.

இப்பிராந்தியங்களுள் தீர்க்கமான நிர்ணய சக்தியாக அமெரிக்காவை வரவிடக் கூடாது என்பதே சோவியத் யூனியனின் மாற்று யோசனையாகும். பிராந்தியத்திலுள்ள ஒரு நாட்டுடனே அல்லது ஒரு பிராந்தியத்திலோ சோவியத்தின் பலம் தூக்கலாக இருக்குமாஞல் ஏனைய இரண்டு பிராந்தியங்களால் சோவியத் யூனியன் பலவீனப்படுத்தப் படடுவிடும். எனவே சோவியத் எல்லா நாடுகளுடனும் தனது உறவை விஸ்தரித்து அமெரிக்காவின் ''தூக்கல்'' கொள்கையை தோற்கடிக்க விரும்புகிறது. இதன் பிரகாரம் சீனுவுடன் உறவைமேம்படுத்தவும்,

**சரண்யன்**

அதேவேளை தென்னுசியாவில் இந்தியாவுடன் மட்டுமன்றி ஏனைய நாடுகளுடனும் தனது உறவை வளர்க்கவும் விரும்புகிறது.

ஆதலால் சீனுவுடன் தனது உறவைப் பலப்படுத்த வேண்டுமென்றுல் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை அப்படியே ஆதரிக்க முடியாது. அதேபோல ஏனைய தென்னுசிய நாடுகளுடன் தனது உறவை அதிகரிக்க வேண்டுமென்றுல் இந்தியாவின் கொள்கையை அப்படியே அங்கீகரிக்கக்கூடாது. இந்த நிலையில் இந்தியாவுடனுன தனது உறவில் சில வரையறைகளை ஏற்படுத்த சோவியத் தற்போது விரும்புகின்றது. ஆதலினுற்தான் தென்னுசியாவிற்கான சோவியத் யூனியனின் கொள்கை வகுப்புக் குழுத் தலைவர், பின்வருமாறு கூறியிருந்தார்: "தென்னுசியாவில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை சோவியத் அப்படியே அங்கீகரிப்பதென்பது பெரும் தவறுகும்." மேலும், இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றி சோவியத் பத்திரிகைகள் குறைகூறியுள்ளதுடன் இந்தியாவிலுள்ள சோவியத் சார்பு கொம்யூனிஸ்ட் கட்சியும், இலங்கைப் பிரச்சினையில் பிரேமதாஸவின் படைவிலகற் கோரிக்கையை வெளிப்படையாக ஆதரித்தது.

இவைதவிர, தூரநோக்குடன் இந்தியா பற்றி சோவியத் இன்னெரு விதமாகச் சிந்திக்கின்றது. இன்று இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா இராணுவரீதியாக வளர்ந்து வருகின்றது. இப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு தனிப்பெரும் சக்தியாக வளர்ந்துவிட்டால், இக்கடற் பிராந்தியத்தில் இந்தியாவிற் தங்கிநிற்க வேண்டிய நிலை சோவியத்திற்கு ஏற்பட்டு விடும். இதில் இந்தியா கடற் பிராந்திய ஆதிக்கம் பெறுவதை சோவியத் மட்டுமன்றி அமெரிக்காவும் விரும்பாது. இந்த வகையில் அமெரிக்காவும் சோவியத்தும் ஒரே கொள்கையைக் கொண்டுள்ளன.

இவற்றுடன் இன்னெரு விடயத்தையும் சோவியத் கருத்தில் எடுக்கின்றது. சோவியத்தின் ஒருபகுதி நிலப்பரப்பு ஆசியாக் கண்டத்தில் உள்ளது. ஆகலினுல் இந்தியாவின் அபரிமிதமான வளர்ச்சி எதிர்காலத்திற் சோவியத்திற்கு ஆபத்தானதாகிவிடும் எனச், சோவியத் அஞ்சுகிறது. இக்காரணங்களை முன்னிட்டு இந்தியாவின் பலத்தையும், வளர்ச்சியையும் மிதப்படுத்தச் (Moderation) சோவியத் விரும்புகிறது. அதேவேளை, இதில் ஒரு திரிசங்குநிலையும் சோவியத்திற்கு



உண்டு. அதாவது, சோவியத்திற்கு இந்தியாவில் பலமான பொருளாதார நலன்கள் தற்போது உண்டு அந்தப் பொருளாதார நலன்களையும் பேணிக்கொண்டுதான், இந்தியாவின் வளர்ச்சியை மிதப்படுத்தும் கொள்கையையும் கடைப்பிடிக்கவேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரணுனவை. இவை இரண்டுக்கும் இடையில் சம நிலையை ஏற்படுத்துவதுதான் சோவியத் வெளியுறவுக் கொள்கைவகுப்பாளரின்

(11ஆம் பக்கம் பார்க்க)

# நேசக்கரம் நீட்டுகிறோம்

சப்பாந்துறையிலுள்ள முஸ்லிம் ஐக்கிய மாணவர் அமைப்பினுல் (MUSA) 1987 இல் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்திலிருந்து, சில பகுதிகளை இன்றைய பொருத்தப்பாடு கருதி, மறுபிரசுரம் செய்கிறேம். ''ஒரு தேசிய இனத்தின் சுதந்திரச் சாசனம் மற்றுமோர் இனத்தின் அடிமைச் சாசனமாக மாறக் கூடாது'' என்று இதில் குறிப்பிடப்படுவது சிந்திப்பதற்குரியது.

— ஆர்.

மது சரித்திரம் அறிந்த காலம் முதல் கிழக்கு மாகாண மக்களாகிய நாம் மிக ஒட்டுறவோடும் நட்புடனும் வாழ்ந்து வந்திருக்கிறேம். இங்கு வாழ் முஸ்லிம் - தமிழ் மக்களின் பொருளாதாரம் கல்வி தொழில் வாழ்க்கை வசதி முதலானமனைத்தும் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பது இதன் அடிப்படையான காரணமாகும். இம்மண்ணில் வாழ் முஸ்லிம்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்தும் பங்களிப்புச் செய்தும் வந்துள்ளனர் என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவ்வாறு நீண்ட காலமாக இணங்கியும் சேர்ந்தும் வாழ்ந்து பழக்கப்பட்ட நாம் இன்று ஒருவரையொருவர் சந்தேகக் கண்ணுடன் நோக்குகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இவற்றுக்கெல்லாம் அண்மைக்காலச் சம்பவங்கள்வழிவகுத்துள்ளன. இந்த துரதிர்ஷ்ட சம்பவங்கள் எமது பல நூற்றண்டு கால வரலாற்றில் நிகழ்ந்திராதனவாகும். அண்மையில் நடந்தவை நடக்கக்கூடாதவையும் ஜீரணிக்க முடியாதனவுமாகும். ஆனல அவை நடந்தேவிட்டது. நடந்த தழும்புகள் ஆற்றமுடியாத வடுக்களாய் எமது வரலாற்றுப் பக்கங்களை கறைபடுத்திவிட்டது.

நடந்தவை, கடந்தவை என்று மறக்க முயலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்னரைவிட அதிகம் வீக்கமான சம்பவங்கள் மன ஓர்மையை சிதைக்கவே செய்கின்றன. இப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்விலவக்கலவரங்கள் பொதுவான ஒருவடிவத்தையும் ஒரு நோக்கத்தையும் கொண்டனவாகவே தலைகாட்டுகின்றன இத்தகைய நிகழ்வுகள் கிழக்கின் இருகண்களான தமிழ், முஸ்லிம் சமுகங்களை நிரந்தரமாகவே பிளவுபடுத்திவிடலாம். இந்த நிலை நிரந்தரமாக விரட்டப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

யாரின் உடைமையும் உயிரும் இழக்கப்படக்கூடாது என்பதே எமது கருத்தாகும். இந்த வகையில்தான் முஸ்லிங்களுக்குச் சொந்தமான காணிகள் முன்னெரு காலத்தில் சிங்கள மக்களுக்கு சொந்தமாக்கப்பட்டதைப்போல தற்போது மல்வத்தைப்பிரதேச காணிகள் முஸ்லிம்களிடமிருந்து அடாவடித்தனமாகப் பறிக்கப்பட்டு அத்துமீறிக்குடியேற்றப்படுவதையும், திருகோணமலை மாவட்டமுஸ்லிங்கள் எதிர்நோக்கும் இன்னல்களையும் நாம் கருதுகின்றேம் இது வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற நிலைமையின் அரிச்சுவடி எழுதப்படு முன்னேயே நிகழ்கின்ற தென்றுல் எமது மக்களின் எதிர்காலம்......?

இவைகளைப் பார்க்கின்றபோது இம்மண்ணிலே பல நூற்றுண்டு காலமாக மொழியாலு ஏனைய காரணிகளாலும் பிணைப்புற்றிருந்த தமிழ் முஸ்லிம் இனங்கள் நிரந்தரமாக பிளவுற்றிருப்பதற்கு செய்யப்படும் சூழ்ச்சியாகவே எமக்குப் படுகிறது. இந்த மண்ணிலே பாரம்பரிய தாயக உரிமையைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் சிறுபான்மைத் தேசிய இனத்தின் சுதந்திரம் ஒரேமொழியைப் பேசுகின்ற மற்றுமோர் சிறுபான்மை இனத்தால் சிரச்சேதமாக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானதே எவ்வாறு உங்கள் உடைமையும், உரிமையும் பேரினவாதிகளால் அபகரிக்கப்பட்டதோ அதே பாதிப்புக்கள் எமக்கும் ஏற்பட்டுள்ளன என்பது யதார்த்தம்–எவ்வாறு தமிழ் தரகுத்தலைமைத்துவங்களால் நீங்கள் ஏமாற்றப்பட்டீர்களோ அவ்வாறே நாங்களும் எங்கள் தலைமைத்துவங்களால் ஏமாற்றப்பட்டுள்ளோம். ஏமாற்றப்பட்டுவருகிறேம்.

ஆடுகள் சண்டையிட்டுக் கொள்வது ஓநாய்க்கு லாபமாக அமைவதனைப்போல ஒரு பரிதாபநிலை தோன்ற உருவாகுவதனை இரு இனங்களையும் சேர்ந்த பொதுமக்கள் புரிந்து கொள்ளவேண்டும் அப்படிப் புரிந்து கொள்வது உண்மையானுல் இன்று நடைபெறும் பயங்கர அத்துமீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டாக வேண்டும்.

ஒரு தேசிய இனத்தின் சுதந்திரச்சாசனம் மற்றுமோர் சிறுபான்மை தேசிய இனத்தின் அடிமைச்சாசனமாக்கப்பட்டால் சுதந்திரம் அர்த்தமற்றதாகப் போய் விடும். தமிழ் இளைஞர்களின் வீரமும் தியாகமும் தன்னலமற்ற போராட்டமும் மற்றுமோர் சிறுபான்மை இனத்தின் உரிமைகள் மறுக்கப்படுவதற்கு நிச்சயம் இடமளிக்கக்கூடாது என்பதே, எங்களது பணிவான வேண்டுகோளாகும். ஏனெனில் உங்கள் தியாகத்தை நாங்கள் மதிக்கின்றேம். உங்கள் போராட்டத்தை நாம் ஆதர்சமாகக் கொள்கின்றேம். ஆம். போராட்டமென்பது ஓரினத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. அது ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து ஓங்கியெழும் சங்கநாதமாகும். □

## ஈழத்துத்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் காதல் கொண்டதையும், தனது அதிகாரி பெர்ணாண்டோ தமிழர்களின் 'பெயர்'கள் பற்றி — அதன் சிங்கள மூலம் பற்றிக் — குறிப்பிட்டதையும் நினைக்கிறான். பரீட்சை நிலையத்திலிருந்து இவ்வாறெல்லாம் நினைப்பதானது செயற்கைத் தன்மையை ஏற்படுத்துகிறது. சிங்கள மொழிச் சட்டத்தின் பாரபட்சம், அதனால் தமிழர்கள் படும் அவலம் பற்றிச் சீரியஸான கருத்தேதுமில்லாத இதன் கதாநாயகன், பரீட்சை அலுவலர்கள் இருவர் தமக்குள் 'பாரேன் இந்தப் பரிதாபங்களை' என்று கதைத்ததைக் கேட்டதும், விடைத்தாள்களைப் பேனையால் கோடிட்டு வெட்டிவிட்டுக் கொடுத்துச் செல்வது, நம்பும்படியாக இல்லை; ஒரு செயற்கையான கதையாகவே படுகிறது.

ஈ) செ. யோகநாதனின் 'உறை' என்ற கதையும் செயற்கையானதாகவே இருக்கிறது. அழகான வண்ணப் படங்கள் உள்ள — ஆனால் சிங்களத்தில் எழுத்துக்கள் அச்சடிக்கப்பட்ட — கடதாசியினால் தனது புத்தகங்களிற்கு உறைபோட ஒரு பதின்மூன்று வயதுச் சிறுவன் முனைகிறான். அவன் தகப்பனுக்குச் சொல்கிறான்: "ஒரு இடத்திலை கூட தமிழிலை விளக்கமில்லை...... இதெல்லாம் அரசாங்க அச்சகத்திலைதான் அச்சடிக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு எழுத்தும் கூடத் தமிழிலை இல்லை." இது 1982 இல் எழுதப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

4. தமிழர்களின் போராட்ட வரலாற்றில் 1961 இல் நடைபெற்ற 'சத்தியாக்கிரகம்' முக்கியத்துவம் வாய்ந்தது. பழைய தலைமுறையினரின் சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கையாக அது இருக்கிறது. அத்தோடு, 1953 இல் இடதுசாரிகள் நடத்திய மாபெரும் ஹர்த்தாலுக்குப் பிறகு இலங்கையில் நடைபெற்ற மாபெரும் வெகுஜனப் போராட்டமாக - இரண்டு மாதங்கள் வடக்குக்—கிழக்கில் அரசு நிர்வாகத்தினை ஸ்தம்பிக்கச் செய்த — நடவடிக்கையாகவும் அது முக்கியத்துவம் பெறுகிறது. இந்த வரலாற்று நிகழ்வைச் சில கதைகள் சித்திரிக்கின்றன.

அ) உரிமைக்கு உயிர் என்ற கதை (1962) முத்து சிவஞானத்தினால் எழுதப்பட்டிருக்கிறது, சத்தியாக்கிரகத்தில் 'துரைராசன்' பங்குபற்றுகிறான். அவனது தங்கை கோமளாவும் பங்குபற்றுகிறாள். இரவு இராணுவம் திடீரெனச் சத்தியாக்கிரகிகளை, தாக்குகிறது. நோயாளித் தாய், தங்கையின் எதிர்காலம் என்பவற்றை யோசித்து துரைராசன் எழும்பி ஓடுகிறான். தங்கை அசையாதிருந்து அடிவாங்குகிறாள்; பின்னர் ஆஸ்பத்திரியில் இறக்கிறாள். தங்கையின் மரணம் துரைராசனைத் தாக்குகிறது: போராட்டங்களில் பங்கு கொள்ள உறுதி கொள்கிறான். ஆசிரியரின் சம்பவச் சித்திரிப்புத் திறன் பிசிறில்லாமல் செல்கிறது. அவர் கருதிய தாக்கத்தைப் படைப்பு ஏற்படுத்துவதில் நல்ல கதையாக, இது மனதில் பதிகிறது.

ஆ) செங்கை ஆழியான் 'நாட்டிற்கு இருவர்' (1962) என்ற கதையை எழுதியுள்ளார். சத்தியாக்கிரக ஊர்வலத்தில் கலந்து கொள்ள முனையும் இளைய மகனைத், தாய் தடுக்கிறாள். மூத்த மகன் அரசியலில் ஈடுபடுவதும் அவளிற்குப் பிடிக்கவில்லை. சத்தியாக்கிரகிகளை இராணுவம் தாக்கியதில் மூத்த மகன் இறக்கிறான். அவனைப் பலர் புகழ்கின்றனர். தாயின் உணர்வு மாறுகின்றது. தமையன் விட்ட இடத்தை நிரப்பச் சொல்கிறாள். கதையின் அமைப்பும், உரையாடலும் செயற்கையாக இருக்கிறது. உணர்வு இறுக்கமாக வெளிப்படுத்தப்படாததால், 'வெறும் கதை'யாகவே இருக்கிறது.

(அடுத்த இதழில் முடியும்)

## யாழ். பல்கலைக்....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்ப கால உறுப்பினர்கள் தான் மனம் தளராது, நம்பிக்கையுடன் முனைந்து செயற்படவேண்டும். யாழ். பல்கலைக் கழக மாணவரிடையே ஒரு ஆரோக்கியமான சூழல் இப்போதில்லை. எதிர்காலத்திலாவது ஒரு 'சீரியஸ்தனமான' மாணவர் சமூகம் இப்பல்கலைக் கழகத்திற்குள் நடமாடவேண்டும். அது சாத்தியப்படவேண்டுமெனில் மாணவர்களை பல்துறைக் கருத்துக்களால் வளப்படுத்தக் கூடிய வகையில், நல்நோக்குக் கொண்ட ஆரோக்கியமான, பல்துறை சார்ந்த மாணவர் அமைப்புக்கள் காணப்பட வேண்டும். அவ்வகையில் பெண்கள் அமைப்பும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு அமைப்பேயாகும். எனவே அதற்கு உறுதியான ஒரு அடித்தளத்தை இட்டுக் கொடுக்க வேண்டியது, அதன் இன்றைய உறுப்பினரின் முக்கிய கடமையாகும்.

இந்நோக்கை அடைய பெண்கள் அமைப்பினர் பின்வருவனவற்றையும் செய்யலாம் என எதிர்பார்க்கிறோம்.

1. தம்மீதான தப்பபிப்பிராயத்தை நீக்கும் பொருட்டு பெண்விடுதலை, பெண்ணிலைவாதம் என்பன குறித்த பகிரங்கக் கருத்தரங்குகளை வைக்கலாம்.

2. சரிதானாயினும் மாற்றங்களை முகத்தில் அறைந்தாற்போல் நிகழ்த்தாமல் சூழலைக் கவனித்து, ஆடுற மாட்டை ஆடியே கறக்கலாம்.

3. பெண்கள் அமைப்பில் ஆண்களையும் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளலாம்.

4. அதிக இடைவெளி விடாமல், தரமான நிகழ்ச்சிகளை முடிந்தவரை அடிக்கடி நிகழ்த்தலாம்.

நல் நோக்கத்திலான ஆத்ம சுத்தியுடன் கூடிய உழைப்பு நல்ல பயனைத் தராமல் போகாது. □

## தலையாலும்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வோதான். அதே டெங்கின் ஆட்சியில் இப்படியும் ஒரு தண்டனை.

இதன் மூலம் என்ன தெரிகிறது? மாஓவை மீண்டும் கடவுளாக்கும் அவசியம் டெங்குக்கு நேர்ந்திருக்கிறது. அப்படியென்றால் தனதுபாதை பிழையென்றும் மாஓவின் பாதையே சரியென்றும் ஒப்புக் கொள்வதாகிறதா? இல்லை. தார்மீக ரீதியாக இழந்து போய்விட்ட சீரழிவுக்கும், தமது பதவியைக் காப்பாற்றச் செய்த கொலைகளுக்கும் புரட்சிச்சாயம் பூசவும், குறியீடாக்கிக் காட்டவும் மாஓவை இழுத்துவந்திருக்கிறார்கள். மாஓவை புதைக்கவேண்டிய நேரம் புதைக்கவும் தோண்டி எடுத்து தூக்கி நிறுத்தவும் இவர்களுக்குத் தெரியும். மாஓ, மாற்றம் என்ற பெயரால் சீனக்கலாசாரத்தை விபச்சாரச் சந்தையாக்கியவரல்ல, 'திபெத்' போன்று அந்நிய நாடொன்றின் மீது அல்லாமல் தனது நாட்டு வெகு ஜனங்களின் மீது ராணுவத்தை ஏவியவருமல்ல. புதிய மாற்றங்களை சிந்தனைத் தெளிவுடன் அடுத்த கட்டத்திற்கு வளர்க்கும் திறனற்றவர்கள் எப்போதுமே இப்படித்தான். பழைய சுலோகங்கள், உருவப் படங்களை தூக்கித்திரியத் தொடங்கி விடுவார்கள். சீனாவில் சிங்கமுகப் பொம்மைத் துணிக்குள்புகுந்து நின்று ஆடும் கூத்து ஒன்றுண்டு. அந்த வகைக் கூத்தை இப்போது டெங் ஆடுகிறார். மாஓவின் பொம்மை முகத்தோடு தலையாலும் காலாலும் நடக்கத் தெரிந்தவர் டெங்ஷியாவோ. ஆனால் சீனாதான் தலை கீழாகிறது.

## இரத்தம்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிவத்தில் எழுந்த சிங்கள இளைஞரின் போராட்டம் இப்போது, தமிழரின் உரிமை மறுப்பு, இந்திய எதிர்ப்பு, அரச எதிர்ப்பு எனும் முப்பரிமாணங்களைப் பெற்று வளர்ந்துள்ளது.

தற்போது சிங்கள இளைஞர்களுக்குச் சரியான வழியை யார் காட்டுவது? இந்தப் பயங்கரப் படுகொலைகளை எவ்வாறு நிறுத்துவது? இனப்பிரச்சினைக்கும், மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் எவ்வாறு தீர்வுகாண்பது?

எது எப்படியாயினும் ஆட்சியாளர்களே கொலைகளை நிறுத்தி, சுபீட்சத்திற்கான புதிய வழிகளைத் தேடவேண்டும்; கொலைகளை நிறுத்தும் முதற்பொறுப்பும் ஆட்சியாளர் பக்கமே உள்ளது. □

## இந்திய-சோவியத்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரயத்தனமாக உள்ளது.

இத்தகைய பின்னணியில் வைத்துத்தான் இலங்கைப் பிரச்சினை சம்பந்தமான சோவியத்தின் கொள்கையைப் புரிந்து கொள்ளவும், மதிப்பீடு செய்யவும் வேண்டும். இப்பிரச்சினை சம்பந்தமாக சோவியத்தின் கொள்கையில் ஏற்படத் தொடங்கியுள்ள மாற்றம் இந்தியாவிற்கு அதிருப்தியை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. □

## நிகழ்வுகள்

### 22 - 8 - 89 செவ்வாய்

வடமராட்சிப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் அசம்பாவிதங்களினால் மக்கள் பீதியடைந்து இடம் பெயர்கிறார்கள் □ மன்னார்ப்பகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது □ பயிலுனர் ஆசிரியர் தெரிவுக்கு இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கையைக் கண்டித்து, தென்மராட்சி தொண்டர் ஆசிரியர் துண்டுப்பிரசுரம் வெளியிட்டனர் □ தென்பகுதியில் நிகழ்ந்த வன்செயல்களில் 53 பேர் மரணமானார்கள் □ பிரேமதாஸவின் சிறப்புச் செய்தியை, பெனாஸிர் பூட்டோவிடம், இஸ்லாமாபாத்தில் அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் கையளித்தார் □ மித்தெனியாவில் கண்ணி வெடியில் ஜீப் சிக்கியதில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் □

### 23 - 8 - 89 புதன்

இலங்கை-இந்தியப் பேச்சுவார்த்தையில் 'பாதுகாப்புக் குழு' நியமிப்பது குறித்துக் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகச் செய்தி வெளியானது □ இந்திய அமைதிப்படை துரிதமாக வெளியேறவேண்டுமென்பதே தனது மாற்று யோசனைகளில் முக்கியமானதென்று, ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது □ அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான யோசனைகள் பற்றிய அறிக்கையொன்றை முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் மாகாணசபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார் □ ஆவரங்காலில் இரு ஆயுதக்குழுக்கள் மோதிக் கொண்டன □ சபாநாயகரின் மெய்ப்பாதுகாவலரான ஏ. ஸி. சகாப்தீன் மருதானையில் சுட்டுக் கொல்லப்பட்டார் □

### 24 - 8 - 89 வியாழன்

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சுழற்சி முறையிலான மின் விநியோகம் தடைப்பட்டது. துஷ்பிரயோகம், ஜெனரேட்டர் பழுதானமை, எரிபொருள் பற்றாக்குறை என்பன காரணங்களாகச் சொல்லப்பட்டன □ உடுப்பிட்டியில் மோதல்நிகழ்ந்தது. இருதரப்பிலும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன □ வட்டுக்கோட்டை, இடைக்காடு ஆகிய இடங்களில் மோதல் சம்பவங்கள் நிகழ்ந்தன □ தென்னிலங்கைப் பல்கலைக்கழக 'சுயாதீன மாணவர் சங்கத்' தலைவர் கே. எல். தர்மசிறியின் கொலையைக் கண்டித்து 'கைஸ்' அறிக்கையொன்றை வெளியிட்டது □ வட-கிழக்கில் ஒரு மாதத்திற்கு மேலாகத் துண்டிக்கப்பட்ட மின்சார விநியோகத்தை மீளத் தொடங்கச் செய்வதில் இலங்கை அரசு போதிய அக்கறை காட்டவில்லை என, வட-கிழக்கு மாகாண அரசு குற்றஞ்சாட்டியது □ சைப்பிரஸ், லெபனான் நிலைமை இலங்கையிலும் ஏற்படப்போகிறதென காமினி திசநாயக்கா சொன்னார் □

### 25 - 8 - 89 வெள்ளி

ஜனாதிபதிக்குப் பாதுகாப்பாகச் சென்ற வாகனங்களில் ஒன்றின்மீது குண்டு வீசப்பட்டது, அதனால் ஐந்து பேர் காயமடைந்தனர் □ யாழ். பெரிய கோவிலடியில் 32 வயது இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் □ இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக தென்னிலங்கையில் போராளிகள் நடத்தும் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது என, எஸ். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான இலங்கை முற்போக்கு முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது □ மின்சாரத் தடையினால் சீமெந்து உற்பத்தி தடைப்பட்டதைத் தொடர்ந்து ஒரு பைக்கற் சீமெந்து 210 ரூபாவுக்கு விற்பனையானது □ தென்பகுதி பொலிஸ் அதிகாரிகள் பலர் வடபகுதிக்கு இடமாற்றம் கோரியுள்ளதாக, செய்தி வெளியானது.

### 26 - 8 - 89 சனி

குருநாகல் மாவட்டத்தில் இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் 3 பொலிஸ்காரரும் 2 பொது மக்களும் கொல்லப்பட்டனர் □ ஊழியர் ஒருவர் சிலரால் கூட்டிச் செல்லப்பட்டதைக் கண்டித்து யாழ். தபாலக ஊழியர்கள் வெளி நடப்புச் செய்தனர் □ 500 இந்திய ஜவான்கள் காங்கேசன்துறையிலிருந்து தாயகம் திரும்பினர் □ தவிர்க்க இயலாத நிலையில் சில நடவடிக்கைகளை எடுக்க தாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது □ இந்தியப்படைகள் வெளியேற்றம் தொடர்பாக தமக்கு இரண்டு கருத்துக்கள் இல்லையென, ஈ. ஜ. முன்னணி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது □

### 27 - 8 - 89 ஞாயிறு

யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளை மீளவும் இயங்க வைப்பதுதொடர்பாக ஆலோசிக்கும் மாநாடு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடை பெற்றது □ கிழக்கில் பரவலாக ஈரோஸ் உறுப்பினர் பலர் கடத்தப்பட்டுள்ளதாக, ஈ. ஜ. மு. செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது □ பளைப்பகுதியில் சூட்டுக்காயங்களுடன் இரண்டு சடலங்கள் காணப்பட்டன □ யாழ். மணிக்கூட்டு வீதியில் இளைஞரொருவரின் சடலம் காணப்பட்டது □ காபந்து அரசை நிறுவுமாறு ஐந்து எதிர்க்கட்சிகளின் கூட்டணி கோரிக்கை விடுத்தது □

### 28 - 8 - 89 திங்கள்

ஜே. வி. பி. விடுத்த அழைப்பை ஏற்று தென்னிலங்கை முழுவதுமான வேலை நிறுத்தம் இன்று ஆரம்பமாகியது □ வடபகுதிக்கான நீர் மின்சாரம் இப்போதைக்குக் கிடைக்கச் சாத்தியமில்லையென வடபிரதேச மின்சார சபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார் □ கொழும்பில் சில பத்திரிகைகள் வெளிவரவில்லை □ கொழும்பில் நான்கு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றன □ கிழக்கில் கடத்திச் செல்லப்பட்ட ஈரோஸ் உறுப்பினர்களில் மூவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக, அதன் யாழ்ப்பாண அலுவலகம் தெரிவித்தது □

திசை
THISAI

# இசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே"*

## நாடும் அரசும் யாருக்காக?

பண்டைத்தமிழர் யுத்தகாலத்தின்போது, நோயாளர், வயோதிபர், பெண்கள், சிறுவர்கள் போன்றோரைத் தமது தாக்குதலிலிருந்து தவிர்ப்பதை யுத்த தர்மமாகக் கொண்டிருந்தனர்.

அராஜகத்தின் மொத்த வியாபாரியான ஹிட்லரின் நாஸிப் படைகூட வைத்தியசாலைகள்மேல் குண்டு பொழிவதை, தாக்குதல் செய்வதைத் தவிர்க்கவே செய்தது.

ஆனல் இன்று தென்னிலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள், இந்த அடிப்படைத் தர்மங்களையெல்லாம் தலைகீழாக்குவனவாய் உள்ளன.

எவையெவை தாக்குதலுக்குட்படாது காப்பாற்றப்படவேண்டுமோ அவையவையே தாக்கப்பட்டு வருவதோடு, அப்படித் தாக்கப்படுவதே யுத்த தந்திரோபாயமாகவும் மாறும் புதிய யுத்த"தர்மங்கள்" இன்று இங்கே உருவாக்கப்பட்டு வருகின்றன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு நகர வட்டார ஆஸ்பத்திரிகளில் நிகழ்ந்த அவலம் இவற்றுக்குச் சான்று. ஆஸ்பத்திரிகள் வன்முறையின் பகடைக்காயாக்கப்படலாமா என்பதே முக்கியமான கேள்வி.

பொதுமக்களைத் துன்புறுத்துவதை, அதிலும் கட்டாயமாகத் தவிர்க்கப்படவேண்டிய கர்ப்பிணிகள், சிறுவர், வயோதிபர், நோயாளர் போன்றோரைத் துன்புறுத்துவதையா யுத்த தந்திரோபாயமாகக் கொள்ளவேண்டும்?

ஜனதிபதி பௌத்த தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்.

ஜே. வி. பி. தலைவர் மார்க்சீய தர்மத்தைக் கடைப்பிடிப்பவர். ஜே. வி. பி. ஆஸ்பத்திரிகளை ஸ்தம்பிக்கச்செய்து நோயாளர்களைக் கொல்வதையே தன் தர்மமாகக் கொண்டிருந்த தென்றல், ஜனதிபதியின் அரசோ இதற்கு மாற்றுவழி தேடாது, இதை உதாசீனம் செய்து தனது ஆணவத்தையே, நிலைநாட்டியதன் மூலம் ஜே. வி. பி. செய்ததையே வேறுவிதத்தில் செய்தது.

இந்நிலையில் எந்தவித தர்மத்தையும் கடைப்பிடிக்காது, தன்னைத் திணித்த அசுரப்போக்குக்கொண்ட ஹிட்லர் கடைப்பிடித்தளவு தர்மம்கூட இவர்களால் கடைப்பிடிக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்படவேண்டும். அப்படியானல் நாடும் அரசும் யாருக்காக உள்ளன என்ற கேள்வி எழுகிறது.

உண்மையான ஆட்சி எங்கு நிலைக்கவேண்டுமானலும் இந்த அடிப்படைத் தர்மங்கள்—நோயாளர் (ஆஸ்பத்திரிகள்) சிறுவர், வயோதிபர், கர்ப்பிணிகள், தமது கண்மூடித்தனமான தாக்குதலுக்கு இலக்காவது தடுக்கப்படல்—பேணப்படவேண்டும். □

# ஜனதிபதி முறை இலங்கைக்கு ஏற்றதல்ல

ஜனதிபதி முறைமையைக் கைவிட்டு முன்பிருந்தது போன்ற பிரதமர் முறைமையைக் கொண்டுவருமாறு, ஐந்து எதிர்க்கட்சிகள் சேர்ந்து கோரிக்கை விடுத்துள்ளன.

பிரெஞ்சு ஜனதிபதியாக இருந்த டிகோல் என்பவரே ஜே. ஆர்.ஜயவர்த்தனவுடைய அபிமானத்திற்குரிய அரசியல் வழிகாட்டியாவார். டிகோலால் உருவாக்கப்பட்ட ஜனதிபதி முறைமையைப் பின்பற்றியே ஜே. ஆர். இலங்கையில் ஜனதிபதி முறைமையைக் கொண்டுவந்தார். ஆதலினல் இலங்கையின் இவ்வரசியற் திட்டத்தை "கோலிஸ்ட்" அரசியற் திட்டமென அழைப்பதுமுண்டு.

கோலிஸ்ட் முறைமை இலங்கைக்குப் பொருத்தமுள்ளதாக இல்லை என்பதைத்தான் அண்மைக்கால நிகழ்வுகளும், மேற்படி கோரிக்கையும் காட்டுகின்றன. கோலிஸ்ட் முறைமையை இங்கு வெற்றிகரமாக நடைமுறைப் படுத்த முடியாமற் போனமைக்கு இனப்பிரச்சினையே காரணம். கோலிஸ்ட் முறைமையானது உண்மையில் ஜனநாயகத்தின் பெயரிலான சர்வாதிகார ஆட்சிமுறைதான். இப்பொழுதுதான் அதன் சர்வாதிகாரத் தன்மையை, சிங்கள மக்களும் எதிர்க்கட்சிகளும் புரியக்கூடியதாய் உள்ளது. இத்தகைய கோலிஸ்ட் முறைமையின் கொடூரத்தைத் தமிழ் மக்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்பே, தமக்கேற்பட்ட அனுபவத்தின் மூலம் புரிந்து கொண்டனர்.

## ஜே. வி. பியும் தமிழரும்

ஜே. வி. பி. தமிழர்களுக்கெதிரான ஒரு இயக்கமல்ல என்பதில் பலருக்கு நம்பிக்கையுண்டு. அண்மைக்காலம் வரையிலான ஜே, வி. பி. யின் ராணுவ நடவடிக்கைகள் இதைக் குழப்புவதாக இல்லை. இருந்தாலும் அவ்வப்போதைய அவர்களின் நடவடிக்கைகள், சில ஊகங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

அவர்களது வடகிழக்கு மாகாணசபை எதிர்ப்பு, அண்மையில் தமது "ரன்ஹண்ட" என்ற வானொலி ஒலிபரப்பில் உரையாற்றிய விஜயவீர புனர்வாழ்வு என்றபேரில் திருமலையில் தமிழர்கள் குடியேற்றப்படுவதைக் கண்டித்தமை, மேலும் மகரகம புற்றுநோய் வைத்திய சாலைக்குச் செல்லும் தமிழ் நோயாளருக்கும் அவர்களோடு கூடச் செல்வோருக்கும் வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் தங்குமிடவசதி கொடுக்கக் கூடாதென அப்பகுதியினர் எச்சரிக்கப்பட்டமை, ஜே. வி. பி. யினரின் தமிழர்பற்றிய மர்மமான போக்கில் சந்தேகம் கொள்ளவே வைக்கும்.

இந்தியப்படை இருக்கும் போது தமிழரைத் தாக்கினல் அதனைச் சொல்லிக்கொண்டு, இந்தியப்படை தென்பகுதிக்கு வந்துவிடும் என்ற பயத்தில் தற்போது அமைதியைக் கடைப்பிடிப்பதாகக் காட்டிக் கொள்ளும் இவர்கள், இந்தியப் படை வெளியேறியதும் தமது சுயரூபத்தைக் காட்டலாம் என்றும், சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

## யாழ். போதன வைத்தியசாலையில் மருத்துவர் பற்றுக்குறை

யாழ். போதன வைத்திய சாலை நிர்வாகம் முக்கியமான துறைகளுக்குரிய வைத்தியர்கள் பற்றுக்குறையினல் பல நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

பொது அறுவைச்சிகிச்சைக்கான நான்கு வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை. முறிவு, தகர்வு அறுவைச் சிகிச்சை; மூளை நரம்பு அறுவைச் சிகிச்சை; காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப்பிரிவு; தோல்வியாதி சிகிச்சைப் பிரிவு, ஆகியவற்றுக்குத் தேவைப்படும் முக்கியமான வைத்திய நிபுணர்கள் யாழ். போதனவைத்தியசாலையில் இல்லை. மேலும் கர்ப்பிணிகள் சிகிச்சைப் பிரிவிலும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் பற்றுக்குறையே உள்ளதாம். வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும் வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடே நிலவுகிறது. இதனல் இப் பிரிவில் நோயாளிகள் மருந்து பெற வெகுநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. குழந்தை வைத்திய நிபுணர் ராமதாஸ் அவர்கள் வெளிநாடு சென்றுள்ளதால் இப்பிரிவும் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாம்.

வைத்திய நிபுணர்களுக்கான பற்றுக்குறை, இவர்கள் வெளிநாடு செல்வதால் மட்டும் ஏற்படவில்லை. சிலர் தமது ஓய்வுகாலம் வரமுன்னரே ஓய்வு பெற்றுக்கொண்டு தனியாக இயங்க முற்படுவதும் ஒரு காரணமாம். தமது சக வைத்திய நிபுணர்கள் போட்டிக்கு வரமுன்னரே, தாம் வெளியில் தமது பெயரை நிலைநாட்டிவிடவேண்டும் என்ற அவதியால் இப்படி நடந்து கொள்வதாகக் கூறப்படுகிறது.

## உத்தரவுபெற்ற வர்த்தகர் சங்கத் தீர்மானம்

யாழ். உத்தரவுபெற்ற வர்த்தகர் சங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானம் கூறுவதாவது:

1. 10. 89 இல் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமுல் நடத்தப்படவிருக்கும் ஜனசக்தித் திட்டம் ஒருகோடி ரூபா வரையிலான பொருட்களை மக்களுக்கு விநியோகிக்க இருக்கிறது. ஆனல் இத்திட்டத்தில் உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் யாழ். உதவி அரசாங்க அதிபரால் நிராகரிக்கப்பட்டுள்ளனர். 48 வருடங்களாக நாம் செய்து வந்த சேவையையும் உரிமையையும் யாழ். உதவி அரசாங்க அதிபரும், சிங்கள அரசும் பறிப்பதை எதிர்த்து நாம் நடத்தப்போகும் சாத்வீகப் போராட்டத்துக்கு சகல கிளை முகாமையாளர்கள் ஊழியர்களின் ஒத்துழைப்பையும் கோருகிறோம். எமது போராட்டம் முதலில் யாழ். கூட்டுறவுச் சங்கத்தை இயங்காமல் தடைசெய்யும்.

## தோரணையில் ஆதரிப்பு உண்மையில் எதிர்ப்பு?

இலங்கையிலிருந்து அமைதிப்படை வெளியேற வேண்டும் என்பதுதான் இந்திய எதிர்க்கட்சிகளின் இன்றைய நிலைப்பாடு. எதிர்க்கட்சிகளுள் ஓர் அங்கமாகிய தி. மு. க. வும் முதலில் இந்நிலைப்பாட்டையே எடுத்திருந்த போதிலும் தற்போது அது படைவிலகல் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரிப்பதாகக் கூறியுள்ளது.

ஏனைய விடயங்களிலெல்லாம் ஆளும் கட்சியினை எதிர்த்து எதிர்க்கட்சிகளுடன் ஒத்த முடிவை எடுத்துள்ள தி. மு. க., படைவிலகல் சம்பந்தமாக மட்டும் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருப்பதேன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையைக் கையாள்வதில் ராஜீவ் அரசாங்கம் பெரும் தவறிழைத்துள்ளதாக இந்தியாவிலுள்ள எதிர்க்கட்சிகளும், அறிவுஜீவிகளும் முன்னணிப் பத்திரிகைகளும் கூறி வரும் அதேவேளை சர்வதேச அபிப்பிராயமும் அவ்வாறே உள்ளது. இத்தகைய நிலையில் இனப்பிரச்சினை தீர்ந்தபாடுமில்லை.

எனவே இந்நிலையில் இப்பிரச்சினையானது எதிர்காலத்தில் ஒரு பூதாகார நிலையை அடையலாமென கருணநிதி முன்னுணர்ந்துள்ளதால், எதிர்காலத்தில் தேவைக்கேற்ப இதற்கான பொறுப்புக்கள் அனைத்தையும் ராஜீவ் அரசாங்கத்தின் மீது சுமத்தி எதிர்கால நிலைமைக்கேற்ப புதிய தீர்மானங்களை எடுப்பதற்கு வாய்ப்பாகவே கருணநிதி இத்தகைய நிலைப்பாட்டை ' எடுத்திருக்கலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அப்படியாயின் பார்வைக்கு ராஜீவை ஆதரிப்பதான இத்தீர்மானம் அடிப்படையில் ராஜீவை எதிர்க்கும் தன்மை வாய்ந்ததாகும்.

## ராணுவ ஆட்சிக்கு முஸ்தீபு

இலங்கையில் முக்கியமான அரச நிர்வாகங்கள், தற்போது ராணுவத்தினரின் கைக்கு மாற்றப்பட்டு வருவதாகத் தெரிகிறது. வானொலி, தொலைக்காட்சி, சுங்கம், குடிவரவு, குடியகல்வு, போக்குவரத்துச் சேவை போன்றவை இந்நிலைக்கு உதாரணம். இப்படி இராணுவத்தினர் சிவில் நிர்வாகத்தில் புகுத்தப்படுவது, எதிர்வரப்போகும் பூரணமான ராணுவ ஆட்சிக்கு ஒத்திகையோ என்ற சந்தேகம் இன்று எழுந்துள்ளது.

## 'பந்த்' . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்குத் திரும்பினர் என்பது அரசின் இப் பயமுறுத்தல்களாலே என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

'பந்த்' அனுஷ்டிப்பதில் பெயர்போன நாடாகக் கருதப்படும் இந்தியா, இதன் பிதாமகர் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகத்தின் போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக பலவகை 'பந்த்' அனுஷ்டிப்புகளைச் செய்துள்ளது. ஆனல் தனது சுதேச ஆட்சியில் 'பந்த்' அனுஷ்டிக்கும் ஜனநாயக உரிமையை இழந்து நிற்கிறது.

'பந்த்' தோல்வியடைந்துள்ளதாக அரசாங்கமும் 'பந்த்' வெற்றி அடைந்துள்ளதாக எதிர்க்கட்சிகளும் கூறுகின்றன. ஆனல் உண்மையில் தோல்வியடைந்துள்ளது 'பந்த்' போன்ற மக்களின் எதிர்ப்புகளைக் காட்ட வழிவகுக்கும் ஜனநாயக உரிமைகளே என்று தெரியவருகிறது.

## ஜே. வி. பி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜே. வி. பி. உத்தரவிட்டுள்ளது. விலகாதவர்கள் சுடப்படுவார்கள் என எச்சரித்துள்ளது. அரசுச் செய்தி ஸ்தாபனங்களின் மா அதிகாரிகள், தலைவர்கள், உத்தியோகத்தர்கள் பலர் தலைமறைவாகியுள்ளனர். பொதுவான தகவலின் படிஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் 7 பேர் ராஜினமாச் செய்துள்ளனர்.

28.8.89 இல் இருந்து பாரிய வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறும் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. ஜே.வி.பி யினரின் எச்சரிக்கைக்குப் பயந்து வேலைக்குச் செல்லாமல் இருக்கும் ஊழியர்கள், ராணுவத்தின் உதவியுடன் அவரவர் வீடுகளிலிருந்து பலாத்காரமாகக்கொண்டு செல்லப்படலாம் என்றும் தெரியவருகிறது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 1-9 1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.